உ

கடவுள் துணை

அனுபோக

# வைத்திய குணபோதினி

...ரேடிவ் டாக்டர்,

...ாசுதேவன்.

8347

பதிப்பாளர்:

... ஏ. கே. சாமி,

...வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.

[விலை ரூபா 1.

உ

கடவுள் துணை

# அநுபோக
# வைத்திய குணபோதினி


நேடிவ் டாக்டர்,

வாசுதேவன்.



பதிப்பாளர் :

எஸ். ஏ. கே. சாமி,

58, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.



காபிரைட்]


[விலை ரூபா 1.

வாகீஸ்வரி அச்சு நிலையம்,
சென்னை:—1954.

# முகவுரை

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிதுகா ணிப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ எது வருமோ வறிகிலேன்" எனச் சிவஞானப் பெருஞ் செல்வராகிய தாயுமானாராலும்,

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என பூலோக சரஸ்வதியாகிய ஒளவைப்பிராட்டியாராலும்,

"கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப்பி னுண்மிக்க காட்சி பெறு நரசென்மமாய்க் கருதப் பிறத்தலரிது" எனப் பிறராலும்,

"துர்லபம் மானுஷ்ய ஜென்மானாம்" என சமஸ்கிருத பண்டிதராலும், மற்றும் பலராலும் ஒருங்கே சிலாகிக்கப்பட்டதுமான கிடைத்தற்கரிய ஆறறிவோடுகூடிய மனித ஜென்மத்தை நாமெல்லோரும் புண்ணிய வசத்தினால் கிடைக்கப் பெற்றிருக்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவனடியைப் போற்றி அடைவதற்கும், அறம் பொருள் இன்பம் வீடாகிய சதுர்வித புருஷார்த்தங்களை அடைவதற்கும், இகபர சுகங்களை எய்துவதற்கும் உறுதுணையாய் விளங்குவது கிடைத்தற்கரிய இம்மானுட யாக்கையே யாம்.

நாம் இந் நிலவுலகின்கண்ணே சகலவிதமான சௌபாக்கிய பாக்கியங்களையும் ஏராளமாய்ப் பெற்றிருந்தாலும், பலவிதமான வியாதிகளினாலேயே பீடிக்கப்பட் டிருப்போமேயானால், அப்போது நாம் சமஸ்தமான பாக்கியங்களைப் பெற்றிருப்பவர்களே யானாலும் உண்மையிலேயே அபாக்கியவான்களே யாவோம். இதுபற்றியன்றோ நமது மூதாதையர்கள் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கூறிப் போந்தார்கள்.

ஆகையால் நாம் தாரூட்டிய திடகாத்திரர்களாய் இருந்தால் தான் கல்வியைக் கற்றதனாலும், செல்வத்தைப் பெற்றதனாலும் ஆம் பயனை முழுக்க முழுக்க அனுபவித்தவர்களே யாவோம்.

நமது முன்னோர்கள் தீர்க்காயுளோடு திடகாத்திரர்களாகவும், பிணியற்றவர்களாவும் வாழவேண்டு மென்னும் நல்லெண்ணத்தினாலேயே ஏராளமான வைத்திய நூல்களை இயற்றியுள்ளார்கள். அவர்கள் இலக்கண இலக்கியங்களையும் வாகட சாஸ்திரங்களையும் ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தும், பிறருக்கு உரைத்தும் காருண்ணிய மிக்கவர்களாய் விளங்கி வந்தார்கள்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்லக் காலப்போக்கில் கற்றவர்கள் அந்நூல்களைப் பிறருக்கு எடுத்துரைக்காமலும், மற்றவர்கள் அந்நூல்களை ஆவலோடு படிக்காமல் வாளா காலம்போக்கிவந்தனர்.

இதற்கு ஒரு முக்கிய காரணம் யாதெனின், அவ் வைத்திய நூல்கள் யாவும் இலக்கண இலக்கிய புஷ்டியோடு கூடிய வாகட சாஸ்திர ஞானங்களை மிகவும் தன்னுள்ளே ஆழமுடைத்தாக கொண்டவைகளாய் இருப்பதால், அந் நூல்களை வைத்திய ஞான மில்லாத புலவர்களாலும் தெரிந்து கொள்ள முடியாது. அன்றியும், வைத்திய அறிவு பெற்றும் இலக்கண இலக்கிய விற்பத்தியில்லாதவர்களாலும் அந்நூல்கள் நுதலும் பொருள்களை நுணுகி ஆய்ந்து அறிய முடியாது. மேலும், அவைகளைப் பரிபாஷையிலே தங்கள் கருத்துக்களைத் தாங்களும் தம்மவர்களுமே புரிந்துகொள்ளும்படி இயற்றியுள்ளார்கள்.

இன்னோரன்ன பல காரணங்களால் நமது தமிழ் வைத்திய நூல்கள் பயன்படாமற் போயின. அத்துடன் அல்லாமல், 'அரைகல்வி முழுமொட்டை' என்பதுபோல், கல்வி சாலாக் கசடர்கள் ஒன்றுகிடக்க ஒன்று பொருள்கூறி, அர்த்தத்தை அநர்த்தமாக்கி அந்நூல்களின் பெருமையை அழித்துப் பாழ்படுத்தலாயினர். அதனால் அவர்கள் அத்தமிழ் நூல்களுக்கே ஓர் இழுக்குத் தேடிவிட்டது பரிதாபத்திலும் பரிதாபமே யாம்.

இச் சூழ்நிலைகளை யெல்லாம் அறிந்து யாம் வைத்திய சாஸ்திரத்தை எல்லோரும் புரிந்து கொள்ளும்படி இனிய எளிய வசன நடையில் அனுபோக வைத்திய துணபோதினி என்னும் பெயரால் எழுதி யாவருக்கும் பயன்படுமாறு பிரசுரித்துள்ளோம்.

இந்நூலுள் முதலாவதாக சரக்குகளின் சுத்தி வகைகள், இரண்டாவதாக சூரண வகைகள், புடம்போடும் வகைகள், மூன்றாவதாக செந்தூர வகைகள், நான்காவதாக பற்ப வகைகள், ஐந்தாவதாக மாத்திரை வகைகள், குழந்தை வைத்தியம், குழந்தை ஔஷத வகைகள், எண்ணெய் வகைகள், லேகிய வகைகள் முதலிய பல விஷயங்கள் கற்றோரே யன்றி மற்றோரும் புரிந்து கொள்ளும் வகையில் கரதலாமலகமாக் கூறிப் போந்தோம்.

இந்நூலை அச்சுவாகனமேற்றிப் பிரசுரித்துதவிய எஸ். ஏ. கே. சாமி அவர்கள்பால் நன்றி செலுத்தக் கடப்பாடுடையேம்.

இதுபோன்ற இன்னம் பல நூல்களை இயற்றுமாறு அடியேனை ஊக்குவிக்கும்படி யாவரையும் மனமகிழ்ந்து கேட்டுக் கொள்ளுகின்றேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

நேடிவ் டாக்டர்,
**வாசுதேவன்.**

கடவுள் துணை

# அநுபோக வைத்திய குணபோதினி

முதலாவது

## சரக்குகளின் சுத்தி வகைகள்

### பவழ சுத்தி

ஆழாக்கு பசுவின் மோரில் கிழியாய்க்கட்டி மூன்று கடிகை ஊறப்போட்டெடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

### லிங்க சுத்தி

பழச்சாறு - முலைப்பாலு - குப்பமேனிச்சாறு இம் மூன்றுஞ் சமனாய் சேர்த்து லிங்கத்திற்கு சுருக்கு கொடுக்க சுத்தியாகும்.

அஷ்டலோக மாரணம் நவலோக மேழும் தீரும்.

### கெவுரி சுத்தி

பன்றிப்பாலில் அவித்திட சுத்தியாகும்; கிழியாய்க் கட்டி ஒருகடிகை நேரம் நிழலிலுலர்த்தி எடுக்கவும்.

### வீர சுத்தி

ஒரு இளநீரில் 1¼ விராகனிடை கர்ப்பூரம் சேர்த்து அவித்தால் சுத்தியாகும்.

### பூரா சுத்தி

வெற்றிலையும் மிளகும் பொழுஞ்செய்து பூரத்தைக் கிளியாய்க்கட்டி மூன்றுநாள் ஊரவைத்திட சுத்தியாகும்.

### வெள்ளை சுத்தி

மிளகை அரைத்து ஒருபடி தண்ணீரில் கலக்கி வெள்ளையை கிளியாய்க்கட்டி தண்ணி சுண்டுமட்டும் காய்ச்சியெடுத்து கழுவி உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

### குதிரைபல்லி சுத்தி

உமிநீரில் மூன்றுகடிகை ஊரப்போட்டு உலர்த்திட சுத்தியாகும்.

### சீலை சுத்தி

ஆழாக்கு காடியில் கிளியாய்க் கட்டிப்போட்டு மூன்று கடிகை அவித்திட சுத்தியாகும்.

### அரிதார சுத்தி

கல்சுண்ணும்பு படி கால், குப்பமேனிச்சாறு படி கால், அமுரி ஆழாக்கு ஒருகடிகை சுருக்காகக் காய்ச்சி உலர்த்திட சுத்தியாகும்.

### சீலாசத்து சுத்தி

எலுமிச்சம்பழச்சாரில் காய்ச்சி உலர்த்திப்போட்டு பின்பு இரண்டுநாள் எருக்கம்பாலில் ஊரவைத்து கழுவிப் போட சுத்தியாகும்.

### கல்நாரி சுத்தி

கழுதைநீரில் மூன்று கடிகை வாட்டிப்போட சுத்தியாகும்.

### கெருடபச்சை சுத்தி

பயறுபோலதட்டி கிளியாய்க் கட்டி குமரிச்சாற்றில் முப்பதுகடிகை காய்ச்சியெடுத்து கழுவி உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

### சினக்கார சுத்தி

ஆவின்பாலில் ஆட்டி ஊரவைக்க சுத்தியாகும்.

### பொரிகார சுத்தி

கிளியாய்க்கட்டி எருமைச்சாணம் சாற்றில் கொதிக்க வைத்து கழுவிப்போட சுத்தியாகும்.

### துக்கில சுத்தி

எருமைமோரில் ஊரப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

### துந்திரிக்கஞ் சுத்தி

ஒரு நாள் முழுமையும் சாருயத்தில் ஊரப்போட்டெடுக்க சுத்தியாகும்.

### காரத்துக்த சுத்தி

மூன்று நாள் மூத்திரத்தில் அவிக்க சுத்தியாகும்.

### கெந்தி சுத்தி

பசுவின் வெண்ணெய்விட்டு இரும்பு காண்டியில் உருக்கி பாலில் ஈறஞ்சுதரம் சாய்க்க சுத்தியாகும்.

### ரசம் சுத்தி

புகைபூரலும் - மஞ்சளும் - செங்கல்தூளும் பொடி செய்து அரைக்க சுத்தியாகும். மேனிச்சாறு - பிரண்டைச் சாறு - இஞ்சிச்சாறு - ஆவாரம்பட்டைக் கியாழம் - சித்திர மூலச்சாறு - திரிபலாதி கியாழம் - நாகபட்டைக் கியாழம் இவைகளில் சுத்திசெய்ய வாலை()தமாக சுத்தியாகும்.

### முடிதார சுத்தி

நாலுபடி பனங்கள்ளில் கிளியாய்க்கட்டி எரித்தெடுத்துக் கழுவிப்போடவும்.

### தாரசிங்கி சுத்தி

ஆட்டுநீரில் முதல் காய்ச்சியெடுத்துக்கொண்டு பிறகு முலைப்பாலில் பத்து நாழிகையும், வெள்ளாட்டுப்பாலில்

பத்து நாழிகையும் உலர்த்திப்போட்டு எடுத்து கழுவிப் போட சுத்தியாகும்.

### தொட்டிப்பாஷாணம் சுத்தி

பொடிப் பொடியாய் வெட்டி கிளியாய்க்கட்டி நெல்லில் அவித்து கழுவிப்போட சுத்தியாகும்.

### மயில்துத்தம் சுத்தி

நல்ல பசும் வெண்ணெயில் இரண்டு நாள் ஊரப் போட்டுக் கழுவி யெடுத்துக்கொள்ளவும்.

### துருசு சுத்தி

நாலுபடி பசும்நீரில் வைத்தெரித்து கழுவி வெய்யலில் உலறப்போட்டு எடுத்துக்கொள்ளவும்.

### சகஸ்திரபேதி சுத்தி

நாரத்தங்காய் சாற்றில் ஊரப்போட்டு கழுவி எடுத்துக்கொள்ளவும்.

### அஞ்சனக்கல் சுத்தி

புளியாரைச் சாற்றில் ஒருநாள் ஊரப்போட்டு எடுத்துக் கொள்ளவும்.

### நாக சுத்தி

நல் எண்ணெயில் ஒருநாள் முழுதும் ஊரப்போட்டெடுத்து மறுபடியும் எலுமிச்சம்பழச் சாற்றில் அறுபது நாழிகை ஊரப்போட்டெடுத்து கழுவி உலர்த்திக்கொள்ளவும்.

### தாம்பர சுத்தி

அமுரியொன்று பழச்சாறொன்று சாரமும் தாளகமும் கூட்டி கலக்கி பத்துநாள் வெய்யலில் வைத்து நீரினால் கழுவிப்போட சுத்தியாகும்.

### நாக சுத்தி

அமுரியில் கல்லுச்சுண்ணம் கூட்டி பழச்சாறும் சேர்த்து நாகத்தை ஆட்டுநெய்யில் உருக்கி பத்துதரம் சாய்க்க சுத்தியாகும்.

### காந்த சுத்தி

கரணஞ்சாற்றில் காந்தத்தைக் காய்ச்சி ஏழுதரம் தோய்த்து கழுவிப்போட சுத்தியாகும்.

### காரீய சுத்தி

வெள்ளாட்டு நீரில் பிரண்டைவேரை அரைத்துப் போட்டு கலக்கி நல் எண்ணெயிட்டு உருக்கிச் சாய்க்க நல்ல சுத்திநீர் ஆகும்.

### பொன்னிமிலை சுத்தி

மூன்றுநாள் காடியில் காய்ச்ச சுத்தியாகும்.

### அபிரேக்கு சுத்தி

அபிரேக்கை பத்துநாள் காடியில் ஊரப்போட்டெடுக்க சுத்தியாகும்.

### கல்மதச் சுத்தி

அமுரியில் கழுவி எடுத்துக் கொள்ளவும் சுத்தமாகும்.

### நேர்வாள சுத்தி

நேர்வாளத்தை கிளியாய்க்கட்டி கரைத்த மீதி சாணக் குழம்பில் போட்டுயெரித்து நன்றாய் எடுத்து உலர்த்தி கொட்டையை வுடைத்து நஞ்சைபோக்கி காடிமோர் பழச் சாறு சேர்த்து பருப்பை பத்துநாள் ஊரப்போட்டு உலர்த்திவைத்துக் கொள்ளவும்.

### சேங்கொட்டை சுத்தி

ஒருநாள் உதயத்தில் ஜலத்தில் போட்டு எடுத்து மறு நாள் உலர்த்திக்கொள்ளவும்.

### சிவதை சுத்தி

பசும்பாலில் அவிக்க அவிக்க சுத்தியாகும்; உலர்த்திக்கொள்ளவும்.

### அழக்தறவேர் சுத்தி

பாலில் அவிக்க சுத்தியாகும்; மூலிகையெல்லாம் பாலில் அவிக்க சுத்தியாகும்.

### அறுபத்துநாலு சரக்குகளின் சுத்தி

மேனிச்சாறு தக்காளிச்சாறு கையாந்த கரைச்சாறு மத்தையினச்சாறு பழச்சாறு அமுரிகூட்டி உப்புச் சுண்ணம் வெடிவுப்புகாரம் சீனம் பலம் 1 கூட்டி அறுபத்து நாலு சரக்கும் சுத்தியாகும்.

### ரசம் சுத்தி

கைத்தாழம்பாலில் ரசத்தை ஏழுநாள் ஊரப்போட்டால் சுத்தியாகும்.

### கெந்தக சுத்தி

கெந்தகம் பசும்பாலில் வேகவைத்தால் சுத்தியாகும்.

### தாளகம் சுத்தி

தாளகத்தை பெரும் பூசனிக்காய் சாற்றில் வேக வைத்தெடுத்து பசும்பால் வார்த்து அரைத்து முடிச்சுக்கட்டி பாலிலே பிட்டுகட்டி யிரக்கினல் சுத்தியாகும்.

### வெள்ளைபாஷாணம் சுத்தி

வெள்ளை பாஷாணத்தை முடிந்துகட்டி சுண்ணும்பில் நீற்று சுத்தியாகும்; அதின் பிறகு பசுவின்பாலில் பிட்டு கட்டவும் சுத்தியாகும்.

### சாதிலிங்கம் சுத்தி

சாதிலிங்கத்தை வெள்ளாட்டு கோமயத்தில் மூன்று சாமம் ஊரப்போட்டால் சுத்தியாகும்.

### மனோசிலை சுத்தி

மனோசிலையை அகத்திப்பூ சாற்றில் இரண்டு நாள் ஊரப்போட்டால் சுத்தியாகும்.

### துத்தம்துருசு சுத்தி

துத்தம்துருசு தயிரிலே ஒரு நாழிகை ஊறினால் சுத்தியாகும்.

### வெங்காரம் சுத்தி

வெங்காரத்தை ஆறுமாதக்காடியில் ஒரு நாழிகை ஊறினால் சுத்தியாகும்.

### கமரி சுத்தி

கமரியை பசுவின் நெய்யில் போட்டு பொங்கினதின் பிறகு இறக்கி அந்தப்படிக்கு ஏழுதரம் பொங்கினதின் பிறகு சுத்தியாகும்.

### எலிபாஷாணஞ் சுத்தி

எலிபாஷாணத்தை பசுவின் கோமயத்தில் ஏழு நாள் ஊரப்போட்டால் சுத்தியாகும்.

### குங்கிலிய சுத்தி

குங்கிலியத்தை தேன்விட்டரைத்து முடிச்சுக்கட்டி வேகவைத்து தண்ணீரில் அறுபது நாழிகை, ஆறுமாதக் காடியில் அறுபது நாழிகை பசுவின்கோமயத்தில் ஊறினால் சுத்தியாகும்.

### சிவதை சுத்தி

சிவதை பசுவின்பாலில் வேகவைத்தால் சுத்தியாகும்.

### எண்ணெய் சுத்தி

சகலமான எண்ணெய்களையும் நல்லஜலத்தில் விட்டு நாலுநாழிகை சென்று எடுத்தால் சுத்தியாகும்.

### ஊமத்தன்விரை சுத்தி

ஒரு சாமம் ஜலத்தில் ஊரவைக்க சுத்தியாகும்.

### சுக்கு சுத்தி

மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தி யெடுத்துக் கொள்ளவும்.

### எட்டிகொட்டை சுத்தி

நெல்லில் அவித்து சிறுகீரை ரசத்தில் ஊரியபின் தேத்தான் கொட்டை ரசத்தில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும்.

### சீரகச் சுத்தி

கருஞ்சீரகம் - சீரகம் இவைகளை சுண்ணாம்பு நீரில் ஏழுஜாமம் ஊரியபின் உலர்த்தி யெடுக்கவும்.

### மாசிக்காய் சுத்தி

பசும்நெய்யில் வருத்து வெடித்தபிறகு எடுத்துக் கொள்ளவும்.

## 64 - சரக்குகளின் சுத்தி வகைகள் முற்றிற்று.

இரண்டாவது

# சூரண வகைகள்

## சுரப் பிரமாணம்

| | | | |
|---|---|---|---|
| வாதசுரம் நாள் | .... | .... | 7 |
| சேட்டுமசுரம் நாள் | .... | .... | 9 |

வாதபித்தசிலேட்டுமம் மூன்றும் கலந்தசுரம் நாள் 15. இது சுரப்பிரமாணமென்றறியவும்.

## சுரத்திற்கு சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீரகம் | விராகனிடை | 3 | சுக்கு | விராகனிடை | 13 |
| கடுக்காய் | .... | 3 | கையாந்தகரை | .... | 13 |
| நெல்லிபருப்பு | .... | 4 | சடாமாஞ்சி | .... | 12 |
| தேத்தான்விரை | .... | 10 | கோரைக்கிழங்கு | .... | 15 |
| பேரீச்சம்பழம் | .... | 6 | முசுமுசுக்கைவேர் | | 6 |
| முந்திரிப்பழம் | .... | 14 | நல்லசந்தனக்கட்டை | | 17 |
| கொத்துமல்லி | .... | 7 | மஞ்சள் | .... | 18 |
| லவுங்கப்பட்டை | .... | 7 | காட்டெருமைப்பால் | | 19 |
| அதிமதுரம் | .... | 9 | நெரிஞ்சிவேர் | .... | 20 |
| திப்பிலி | .... | 10 | தூதுவேளை | .... | 25 |
| பெண்மாவைக்கிழங்கு | | 25 | | | |

இவையெல்லாம் சூரணஞ்செய்து வடிகட்டிக்கொண்டு சமனுக சர்க்கரைக்கூட்டி அபிரேக்கு செந்தூரம் விராகனிடை - 8 இதிற்கலந்து பசுவின் நெய்யிலாவது தேனிலாவது இரண்டுவேளையும் விரகடிப்பிரமாணம் சாப்பிடவும்; தீரும் வியாதி:-திரிதோஷசுரம்-நீரிழிவு-ரத்தப்பிரமியம்-சுக்கிலப்பிரமியம் - மூத்திரக்குளச்சி - சிக்குமூத்திரம் - நீர்க்

கடுப்பு - வயர் எரிச்சல் - ஒருதலைநோல் - கிறுணி - எலி கடி - பேய் - நரிகரடி - காமாலை - குஷ்டம்-க்ஷயம்-பாண்டு- அதிகதாகம் - சரீரநடுக்கம் இந்த வியாதிகளெல்லாம் தீரும்.

## அசுவகெந்தி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிராம்பு | விராகனிடை | 1 | மிளகு | விராகனிடை | 8 |
| நாகப்பூ | .... | 2 | தாளிசபத்ரி | .... | 5 |
| ஏலம் | .... | 3 | பெருஞ்சீரகம் | .... | 6 |
| லவுங்கப்பட்டை | .... | 4 | கொத்துமல்லி | .... | 7 |
| திப்பிலி | .... | 16 | அமுக்குறுவேர் | .... | 64 |
| சுக்கு | .... | 32 | | | |

சேலத்துசர்க்கரை சமனுகச் சேர்த்து வெய்யலில் உலர்த்தி சூரணஞ்செய்து சர்க்கரையோடு கலந்துகொண்டு நெய்யிலாவது தேனிலாவது சாப்பிடலாம். தீரும்வியாதி:- இருமல் சுரம் - உஷ்ணம் - முதலான சகல வியாதிக்கும் கொடுக்கலாம். இதில் அமுக்குறுவேர் சுத்தி செய்துக் கொள்ள வேண்டியது; மற்ற வகைகள் இளவருப்பாய் செய்யவும் இச்சாபத்தியம்.

## அறுவகைச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீரகம் | பலம் | 1 | சதகுப்பை | பலம் | 1 |
| அதிமதுரம் | .... | 1 | சின்னலவுங்கப்பட்டை | | 1 |
| கிராம்பு | .... | 1 | கொத்துமல்லி | .... | 6 |
| கருஞ்சீரகம் | .... | 1 | சீனிகற்கண்டு | .... | 12 |

சூரணம்செய்து கொண்டு அந்தி சந்தி கொடுக்கவும்; தீரும்வியாதி:- சூலை எரிவு நெஞ்சுவலி சிரசுநோய் பித்தநீர் ஊறல் கண்ணீர்பாய்ச்சல் பெலன் நித்திரைசுகம் உண்டாகும்; கிருமிபூச்சி இடுப்புவலி கல்லடைப்பு பித்தம் செவிநோய் சேத்துமம் தொண்டைப்புண் சரீரத்தின் நீர் கட்டு இவையெல்லாம் தீரும் இச்சாபத்தியம்.

## ஈளை இருமலுக்கு சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | பலம் | 1 | தாளிசபத்திரி | பலம் | 2 |
| மிளகு | .... | 1 | கொடிமுந்திரிகை | .... | 2 |
| திப்பிலி | .... | 1 | சீரகம் | .... | 1 |
| ஏலம் | .... | 2 | கோஷ்டம் | .... | 1 |

இவைகளை சூரணம்செய்து சேலம் சர்க்கரை சமனாய் சேர்த்து சாப்பிடவும்; தீரும் வியாதி:-இருமல் பித்தவாய்வு பக்கசூலை சத்திகுன்மம் இச்சாபத்தியம்.

## தாளிசபத்திரி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாளிசபத்திரி | பலம் | 10 | லவுங்கப்பட்டை | பலம் | 1 |
| திரிகடுகு | .... | 1 | அக்கிராகாரம் | .... | 1 |
| திரிபலாதி | .... | 1 | யானை திப்பிலி | .... | 1 |
| கோஷ்டம் | .... | 1 | சீரகம் | .... | 1 |
| கொத்துமல்லி | .... | 1 | கிராம்பு | .... | 1 |
| வாய்விளங்கம் | .... | 1 | ஏலம் | .... | 1 |
| சாதிக்காய் | .... | 1 | சடாமாஞ்சில் | .... | 1 |
| சோம்பு | .... | 1 | வால்மிளகு | .... | 1 |

இவைகளை யெல்லாம் சூரணஞ்செய்து சர்க்கரை சமனாய் சேர்த்து கலந்துகொண்டு நெய்யில் இரண்டு வேளை யும் சாப்பிடவும்; தீரும் வியாதி:- அஸ்திசுரம் தாகம் பித்த வெட்டை பித்தபாண்டு கிராணிவிம்மல் விக்கல் கைகா லெரிவு இவைகளெல்லாம் சாந்தமாகும். பத்தியம் புளி - புகை யாகாது.

## நிலாவிரைச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலாவிரை | பலம் | 1 | மிளகு | பலம் | 1 |
| சுக்கு | .... | 1 | வாய்விளங்கம் | .... | 1 |
| ஓமம் | .... | 1 | | | |

இவைகளை சூரணித்துக் கொண்டு சர்க்கரை பலம் 5-சேர்த்து ஒரு கரண்டிபிரமாணம் இரண்டு வேளையும் வெந்நீரில் கொள்ளவும்; தீரும் வியாதி:- மேகவியாதி புரை யோடின இரணம் யாவும் தீரும் இச்சாபத்தியம்.

## திராட்சாதி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திராட்சப்பழம் | பலம் | 2 | அலகிழங்கு | பலம் | 2 |
| முந்திரிப்பழம் | .... | 2 | அதிமதுரம் | .... | 2 |
| நெல்லுபொரி | .... | 2 | பேரீச்சம்பழம் | .... | 2 |
| நன்னாரிவேர் | .... | 2 | கூகைநீர் | .... | 2 |
| வெட்டிவேர் | .... | 2 | நெல்லிபருப்பு | .... | 2 |
| கோரைக்கிழங்கு | .... | 2 | நல்லசந்தனம் | .... | 2 |
| சாதிக்காய் | .... | 2 | சாதிபத்திரி | .... | 2 |
| கிராம்பு | .... | 2 | சிறுநாகப்பூ | .... | 2 |
| பெருநாகப்பூ | .... | 2 | திப்பிலி | .... | 2 |
| ஏலரிசி | .... | 2 | கொத்துமல்லி | .... | 2 |
| விலாமிச்சம்வேர் | .... | 2 | | | |

இவைகளை சூரணஞ்செய்து அதற்கு சரியாக சர்க்கரை கலந்து பசுவின் பாலிலாவது பசுவின் நெய்யிலாவது தேனி லாவது இருகடிப்பிரமாணம் சூரணம் இரண்டு வேளையும் சாப்பிடவும்; இதுகளில் தீரும் வியாதி:- தாகச்சுரம் பாண்டு ரோகம் காமாலே ரத்த மூத்திரம் உள்ளங்கை வெரிச்சல் சிறு நீர் மஞ்சள் நிறமாயிரங்குதல் தலை கிருகிருப்பு மூர்ச்சை இதுகள் தீரும் கடும்பத்தியம்.

## ஏலாதிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | விராகனிடை | 10 | மிளகு | விராகனிடை | 3 |
| கிராம்பு | .... | 10 | திப்பிலிமூலம் | .... | 3 |
| தாளிசபத்திரி | .... | 10 | சித்தரத்தை | .... | 3 |
| திப்பிலி | .... | 10 | சிறுதேக்கு | .... | 3 |

| | | | |
|---|---|---|---|
| வளையலுப்பு விராகனிடை | 3 | இந்துப்பு விராகனிடை | 3 |
| கர்கடைசிங்கி .... | 3 | பொட்டிலுப்பு .... | 3 |

இதுகளெல்லாம் சூரணம் செய்து சர்க்கரை மூன்று பலம் கலந்து விராகனிடை சூரணம் எடுத்து பசுவின் நெய்யிலாவது தேனிலாவது சாப்பிடவும்; இச்சாபத்தியம். இதில் தீரும் வியாதி:- வாதசுரம் காமாலை பாண்டுவகை அன்னத்துவேஷம் இதுகள் நீங்கும்.

## மகா ஏலாதிச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| ஏலம் விராகனிடை | 3 | சிறுநாகப்பூ விராகனிடை | 3 |
| பச்சைகர்ப்பூரம் .... | 3 | சீரகம் .... .... | 3 |
| கிராம்பு .... | 3 | கருஞ்சீரகம் .... | 3 |
| லவுங்கப்பட்டை .... | 3 | பேரீச்சம்பழம் .... | 3 |
| லவுங்கபத்திரி .... | 3 | சடாமாஞ்சில் .... | 3 |
| அதிமதுரம் .... | 3 | சுக்கு .... .... | 3 |
| திப்பிலி .... | 3 | மிளகு .... .... | 3 |
| கடுக்காய் .... | 3 | தான்றிக்காய் .... | 3 |
| நெல்லிபருப்பு .... | 3 | செங்கழுணி .... | 3 |
| கோஷ்டம் .... | 3 | கூகைநீர் .... | 3 |
| சாதிக்காய் .... | 3 | கொத்துமல்லி .... | 3 |
| கர்ப்பூரசிலாசித்து .... | 3 | தாதுசாத்திரபேதி .... | 3 |
| கிரந்தி தகரம் .... | 3 | நல்லசந்தனம் .... | 3 |
| விலாமிச்சம் .... | 3 | பூமிசர்க்கரை கிழங்கு | 3 |

இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கூட்டி சூரணம் செய்து சூரணத்திற்கு நாலிலொருபங்கு பருத்திவிரை பருப்பு கலந்து இளநீர் வார்த்துப் பிசைந்து நன்றாய் ஆறினபிறகு சம ஞை சர்க்கரையுங் கூட்டி நேரத்திற்கு நேரம் அரைபணவிடை வசந்த குசுமாகாங்கலந்து விராகனிடை சூரணம் இளநீரிலேயாவது பசுநெய்யிலேயாவது, தேனிலேயாவது இரண்டு வேளையும் அரைமண்டலம் சாப்பிடவும்; பத்தியம்:

சிறுகீரை - பொன்னாங்காணிக் கீரை-புடலங்காய் - பசுவின் பால் பசுவின்நெய் சேர்த்துக் கொள்ளவும். தீரும்வியாதி:- இரத்த பித்தம் - தேகமெல்லாம் எரிவு - இரத்த பிரமியம் - சுக்கில பிரமியம் - உஷ்ணம் - கிரந்திகள் - க்ஷயங்கள் சகல ரோகமும் தீரும்.

## கர்ப்பூராதிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கர்ப்பூரம் | பலம் | 2 | இலவம்பிசினி | பலம் | 2 |
| ஏலம் | .... | 2 | லவுங்கப்பட்டை | .... | 2 |
| கிராம்பு | .... | 2 | அதிமதுரம் | .... | 2 |
| சிறுநாகப்பூ | .... | 2 | சீரகம் | .... | 2 |
| கருஞ்சீரகம் | .... | 2 | முந்திரிப்பழம் | .... | 2 |
| பேரீச்சம்பழம் | .... | 2 | சடாமாஞ்சில் | .... | 2 |
| கடுக்காய் | .... | 2 | தான்றிக்காய் | .... | 2 |
| நெல்லிபருப்பு | .... | 2 | செங்கழிகோஷ்டம் | .... | 2 |
| கூகைநீர் | .... | 2 | மரமஞ்சள் | .... | 2 |
| சாதிக்காய் | .... | 2 | சாதிபத்திரி | .... | 2 |
| கிராம்பு | .... | 2 | கொத்துமல்லி | .... | 2 |
| மஞ்சள் | .... | 2 | கயச்சோளம் | .... | 2 |
| கர்ப்பூரசிலாசித்து | .... | 2 | சாத்திரபேதி | .... | 2 |
| கல்நாறு | .... | 2 | கிரந்திதகரம் | .... | 2 |
| ஆனைதிப்பிலி | .... | 2 | காட்டுப்பனைவேர் | .... | 2 |
| நெருஞ்சிவேர் | .... | 2 | செருப்புநெருஞ்சிவேர் | | 2 |
| தாமரைக்கிழங்கு | .... | 2 | நிலப்பனைகிழங்கு | .... | 2 |
| கோவைக்கிழங்கு | .... | 2 | நல்லசந்தனம் | .... | 2 |
| ஆவாரம்வேர் | .... | 2 | நிலாவிரைவேர் | .... | 2 |
| பொன்னாங்கணிவேர்.... | | 2 | கீழாநெல்லிசமூலம் | | 2 |
| தேத்தான்விரைவேர்.... | | 2 | சீந்தில்கொடி | .... | 2 |
| மருளிவேர் | .... | 2 | பிரமிசமூலம் | .... | 2 |
| மாகாளிகிழங்கு | .... | 2 | | | |

இதுகளெல்லாம் ஒன்றாய்க் கூட்டி யிடித்து இளநீர் வார்த்துப் பிசைந்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி சூரணத்திற்கு சமனுக சர்க்கரை கலந்து இந்த சூரணம் மூன்று விரல் பிரமாணம் பசுவின் பாலிலாவது பசும் நெய்யிலாவது பச்சரிசி கழுவின நீரிலாவது முந்திரிப்பழத்துடனேயாவது சாப்பிடவும்; தீரும் வியாதி:- இருபதுவகை மேகங்களும் - மூத்திரக் குளசியும் - நீரிழிவு, இதுகளெல்லாம் தீரும். பத்தியம் புளி - புகையிலை நீக்கவும்.

## மகா அசுவகெந்தி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | விராகனிடை | 5 | திப்பிலி | விராகனிடை | 16 |
| கையாந்தகரை சூரணம் | | 5 | சுக்கு | .... | 32 |
| தேவதாரம் | .... | 5 | அமுக்கிராகிழங்கு.... | | 64 |
| மிளகு | .... | 8 | | | |

இதுகளெல்லாம் இடித்து சூரணத்தில் சமனுக சர்க்கரை கலந்து விராகனிடை சாப்பிடவும். தீரும் வியாதி:- பழசுரங்கள், அஸ்திசுரங்கள் தீரும்.

## காமாலை வீக்கம்கரைய சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | பலம் | 1 | தானிக்காய் | பலம் | 1 |
| மிளகு | .... | 1 | நெல்லிபருப்பு | .... | 1 |
| திப்பிலி | .... | 1 | கொடிவேலி | .... | 1 |
| வாய்விளங்கம் | .... | 1 | கோரைக்கிழங்கு | .... | 1 |
| கடுக்காய் | .... | 1 | | | |

இதுகளெல்லாம் இடித்து சூரணம் செய்து இதுகள் நிரைக்கு சமனிடை அரைப்பொடி நிறுத்துப் போட்டு ஒன்றாய்க் கலந்து ஒருகடி பிரமாணம் தேனில் கலந்து சாப்பிடவும், காமாலைவீக்கம் தீரும். இச்சாபத்தியம்.

## தாவாக்கினிச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| ஓமம் | விராகனிடை 1 | திரிகடுகு | விராகனிடை 1 |
| பெருங்காயம் | .... 1 | திரிகலை | .... 1 |
| வாய்விளங்கம் | .... 1 | செவ்வியம் | .... 1 |
| பஞ்சலவணம் | .... 1 | திப்பிலிமூலம் | .... 1 |
| அத்தித்திப்பிலி | .... 1 | கோரைக்கிழங்கு | .... 1 |
| கடுகுரோகணி | .... 1 | சீரகம் | .... 1 |
| கருஞ்சீரகம் | .... 1 | கோஷ்டம் | .... 1 |
| கண்டங்கத்திரி | .... 1 | வெப்பாலை அரிசி | .... 1 |
| சிறுவழுதிலைவேர் | .... 1 | சிவதைவேர் | .... 1 |
| ஈசுரமூலிவேர் | .... 1 | பொன்முசுட்டைவேர் | 1 |
| சிறுதேக்கு | .... 1 | சத்திச்சாரம் | .... 1 |
| எவச்சாரம் | .... 1 | வசம்பு | .... 1 |
| மஞ்சள் | .... 1 | மரமஞ்சள் | .... 1 |

இதுகளெல்லாம் ஒன்றாய்க் கூட்டி யிடித்து சூரணம் செய்து இதில் கண்டதில் பாதி சர்க்கரை கலந்து அந்தி சந்தி இரண்டு வேளையும் வெந்நீரில் கொள்ள சீதவாதம் குன்மம் பழைய மலப்பாண்டு மந்தாக்கினி காசம் சுவாசம்-அருசி-வாந்தி அசீரணவகை முதலான சர்வ வியாதியும் தீரும்; இதற்கு பாக்களவு நேர்வாளம் இதற்கு அஞ்சு காசடை இலைக்கள்ளிவேரும் கலந்துகொள்ள நல்லது; ஒரு கடிகை மூன்று குளிகை காலை மருந்துக்கும், ஒரு குளிகை அந்தி மருந்துக்கு மிடலாம். சர்க்கரையில்லாவிட்டாலும் நல்லது; அனுபானம் சூரணமுமே கொள்ளலாம். உண்டை கட்டினால் தேனிலிடலாம், வியாதி குணமறிந்து கொடுக்கவும்.

## விளங்காதிச் சூரணம்

வாய்விளங்கம், திப்பிலி, ஏலம், இலவங்கம், லவுங்கப் பட்டை இது வொவ்வொன்று ஒரு பங்கு; சுக்கு, திப்பிலி,

மிளகு ஒவ்வொன்று நாலுபங்கு சேர்த்துக் கூட்டி சூரணம் செய்து சூரணத்துக்கு சர்க்கரை கலந்து காலமே கழஞ்சி கொள்ள, காலைச்சுவாசம்-இருமல் - க்ஷயம் - தீரும். தீபன முண்டாம்; இதற்கு காச்சல் மேலுடம்பு யீளை இருமலாலே சுவாசமானால் சர்க்கரை நீக்கி சூரணம் கொள்ளவும்.

## வேறு இஞ்சிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இஞ்சி | பலம் | 1 | கோஷ்டம் | பலம் | $\frac{1}{8}$ |
| சர்க்கரை | .... | $\frac{1}{2}$ | கொத்துமல்லி | .... | $\frac{1}{8}$ |
| திப்பிலி | .... | $\frac{1}{2}$ | சிறுநாகப்பூ | .... | வீசம் |
| மிளகு | .... | $\frac{1}{2}$ | வாய்விளங்கம் | .... | வீசம் |
| சீரகம் | .... | $\frac{1}{4}$ | அதிமதுரம் | .... | வீசம் |
| கிறும்பு | .... | $\frac{1}{2}$ | விலாமிச்சம்வேர் | .... | வீசம் |
| ஜாதிக்காய் | .... | $\frac{1}{2}$ | லவங்கப்பத்திரி | .... | வீசம் |
| ஏலம் | .... | $\frac{1}{4}$ | பசுவின் நெய் | .... | $\frac{1}{2}$ |

இவைகளை யெல்லாம் சூரணம்செய்து வஸ்திரகாயம் செய்துக்கொண்டு இஞ்சியை வட்டமாக அறுத்து பசுவின் நெய்யிலே வறுத்து சரக்குகளுடன் சேர்த்துக் கலந்து சர்க்கரையுடன் ஒருகடி பிரமாணம் நெய்யில் சாப்பிடவும். தீரும் வியாதி:- இருமல் சுவாசம் - ஈளை காசம் இவைகள் தீரும்.

## கட்டுசூலைக்கு கூக்குடாதிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | விராகனிடை | 3 | சிறுதேக்கு | விராகனிடை | 3 |
| திப்பிலி | .... | 3 | வாய்விளங்கம் | .... | 3 |
| மிளகு | .... | 3 | சித்தரத்தை | .... | 3 |
| சித்திரமூலம் | .... | 3 | கடுகுரோகணி | .... | 3 |
| திப்பிலிமூலம் | .... | 3 | பரங்கிப்பட்டை | .... | 3 |

இவைகளை சூரணம்செய்து நல்லெண்ணெய் விட்டுக் கொழப்பி கருங்கோழி ஐதை கோழிக் குடல்வாங்கிப் போட்டு இந்த மருந்தை கோழிவயிற்றில் வைத்து தைத்து வாதநொச்சிச்சார் படி ½, மிளகு தக்காளிச்சார் படி ½, கையாந்தகரைச்சார் படி ½, சங்கலச்சார் படி ½, நல்லெண்ணெய் படி ½ இதுகளையெல்லாம் அடுப்பில்வைத்து காய்கிற போது அந்த மருந்தில் கோழியைக் கூடப்போட்டு லேகிய பக்குவத்தில் இறக்கி கோழியெலும்பை யெடுத்துப்போட்டு நிழலுணர்த்தலாய் உலர்த்தி சூரணம்செய்து இரண்டு வேளையும் இரண்டு விராகனிடை தேனில் சாப்பிடவும். இதற்கு பத்தியம்: பசுவின்பால் கோழிக்கறி புளி கடுகு நல்லெண்ணெய் இவை ஆகாது. இந்த ஔஷதம் ஒரு மண்டலம் சாப்பிடவும்; கடுஞ்சூலைகள் தீரும்.

## பூபதிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கீழாநெல்லிவேர் | பலம் | 1 | மிளகு | விராகனிடை | 2 |
| திப்பிலி | விராகனிடை | 2 | மாதளை ஓடு | .... | 2 |
| ஜாதிக்காய் | .... | 2 | இலவம்பிசினி | .... | 1 |
| மாங்கொட்டை | .... | 2 | சீரகம் | .... | 1 |
| பெருமரப்பட்டை | .... | 4 | வெந்தயம் | .... | 1 |
| சமுத்திரப்பழம் | .... | 1 | நீர்முள்ளி விரை | .... | 1 |
| கிராம்பு | .... | 1 | ஜோகிவிரை | .... | 1 |
| அரத்தை | .... | 1 | அதிவிடையம் | .... | 1 |
| வலம்புரிக்காய் | .... | 1 | சுக்கு | .... | 1 |
| சதகுப்பை | .... | 1 | குருசானி ஓமம் | .... | 1 |
| வாய்விளங்கம் | .... | 1 | அபினி | .... | 1 |
| புளியங்கொட்டை ஓடு | | 5 | நெல்பருப்பு | .... | 3 |

இவைகளை இளவருப்பாக வருத்து சூரணம் செய்து ஒரு கடிபபிரமாணம் தேனிலாவது வெந்நீரிலாவது சாப்பிட

கிராணி, பித்தக்கிராணி, அதிசாரம், சூலை, பெருமல், இரைச்சல், வயற்கடுப்பு இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

## இருமல் தீர இண்டாதிச் சூரணம்

இண்டவேர்ப்பட்டை, கண்டங்கத்திரிவேர், சுளா விரை வேர், சிறுதேக்கு சமனாகக்கூட்டி சூரணம் செய்து தேனில் கொள்ள இருமல் தீரும்.

## அதிசாரக்கிராணிகள் தீர தாடினச் சூரணம்

| | |
|---|---|
| மாதளங்காய் | மாங்கொட்டைப்பருப்பு |
| வில்வக்காய் | ஆத்திப்பூ |
| கிராம்பு | பெருங்காயம் |
| ஜாதிக்காய் | ஏலம் |
| புளியம்பழம் ஓடு | பெருமரத்துப்பட்டை |
| விளாம் பிசினி | பொன்முசுட்டைவேர் |
| அபினிமருந்து | கரிவேப்பிலையீர்க்கு |
| இந்துப்பு | வாய்விளங்கம் |
| வெந்தயம் | அதிவிடையம் |
| சாதிபத்திரி | சுளர்ச்சிபருப்பு |
| சீரகம் | சடைக்கஞ்சாவிரை |
| சுக்கு | கருஞ்சீரகம் |
| வெப்பாலை அரிசி | மிளகு |

இதுகளை வகை ஒன்றுக்கு விராகனிடை ½ பாகம் சேர்த்து இளவருப்பாய் வறுத்து பொடிசெய்து வடிகட்டிக் கொண்டு பதனம் பண்ணவும். இந்தச் சூரணம் எருமைத் தயிரிலேயாவது நெய்யிலேயாவது வெந்நீரிலேயாவது சாப்பிடவும். பத்தியம்: லக்கிரி கோழி மாமிசம் ஆகாது; பண்டி மாமிசம் ஆகும்.

## சந்தனாதிச் சூரணம்

| | |
|---|---|
| சந்தனம் | அதிமதுரம் |
| கோரைக்கிழங்கு | முந்திரிப்பழம் |
| சன்னநாகசுரம் | கோஷ்டம் |
| இலுப்பைப்பூ | செங்கழுணிநீர்க் கிழங்கு |
| விலாமிச்சம் | கோரோசனம் |
| நெல்லிபருப்பு | பேரீச்சம்பழம் |

இதுகளை சமனாகச் சேர்த்து சூரணம் செய்துக் கொண்டு பங்காளச் சர்க்கரை சமனாகக்கூட்டி கலந்து காலமே ஒரு கடிப்பிரமாணம் கொள்ளவும். இதில் தீரும் வியாதி:- சை, கால், உடம்பெரிச்சல், பிரமேகம், பயித்தியம், அதிக உஷ்ணம் தீரும்.

## ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | தாமரைப்பூவிற்குள் இருக்கும் அரும்பு |
| நற்சீரகம் | அகிலக்கிழங்கு |
| அதிமதுரம் | சடாமாஞ்சில் |
| திப்பிலி | சந்தனம் |
| கோரைக்கிழங்கு | நெரிஞ்சிக்காய் |
| நிலவேம்பு | நாகப்பூ |
| நற்பாலைவேர்பட்டை | இலுப்பைப்பூ |
| கோஷ்டம் | சீந்திசர்க்கரை |
| இருவேர் | சுக்கு |
| இலவங்கம் | அமுக்குறாவேர் |
| நெரிஞ்சிவேர் | கொத்துமல்லி |
| இலவம் பிசினி | காட்டெருமை மூத்திரம் |
| நல்லேலம் | விலாமிச்சம்வேர் |
| முரிப்பழம் | கஸ்தூரிமஞ்சள் |
| நன்னாரிவேர் | |

| | |
|---|---|
| நீர் வள்ளிக்கிழங்கு | சாதிக்காய் |
| சாதிபத்திரி | பூனைக்காலி பருப்பு |
| லவங்கப்பட்டை | |

இவை ஒவ்வொன்றும் சமனிடையாகக்கூட்டி சூரணம் செய்து வடிகட்டிக்கொண்டு காலமே தேனிலாவது வெண்ணெயிலாவது கொள்ளவும். தீரும் வியாதி:- வயிற்றெரிச்சல், உடம்பெரிச்சல் இவைகள் தீரும். வீரியவிர்த்தி உண்டாகும்.

## காய்ச்சல்-கிராணிக்கு மாதளச் சூரணம்

| | |
|---|---|
| மாதளவோடு | அதிவிடையம் |
| வில்வம் | மூத்தக்காசு |
| பெருமரப்பட்டை | பொன்முசுட்டைவேர் |
| லவங்கப்பட்டை | சாதிபத்திரி |
| புளியம்பழம் தோல் | திரிகடுகு |
| ஜாதிக்காய் | சாத்திரபேதி |
| சதைக்கிராம்பு | கெட்டிமாங்கொட்டை |

இவைகளைச் சமஎடைக்கூட்டி சிவக்க வறுத்து பொடி செய்துக்கொண்டு காசிடை தேனில் கொள்ளவும். தீரும் வியாதி:- காய்ச்சல், கழிச்சல், கிராணி, முருக்கு இவைகள் தீரும். காய்ச்சலில்லாதிருந்தால் மற்ற அதிசாரத்துக்கு தயிரிலிடவும்; பத்தியம்: தயிர் சாதம் சாப்பிடவும்.

## மூலத்துக்குச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சீரகம் விராகனிடை | ½ | நேர்வாளம் விராகனிடை | 1 |
| கடுக்காய்ப் பொடி .... | 5 | கருணைக்கிழங்கு .... | 8 |
| திப்பிலி .... | 1 | அவச்சாரம் .... | 2 |
| அத்தித்திப்பிலி .... | 2 | செங்கொட்டை .... | 8 |
| செவ்வியம் .... | 3 | சிவதைவேர் .... | 8 |
| சித்திரமூலம் .... | 2 | | |

இவைகளைக் கூட்டி சூரணம் செய்து இந்த சூரணத் திடைக்கு நாட்டுச்சர்க்கரை கலந்து பிறகு ஒரு கொட்டைப் பாக்கு பிரமாணம் எடுத்து மோரில் போட்டு குழம்பாய் குழைப்பி சாப்பிடவும். அசாத்திய மூலம் தீரும். ஒருமாதம் இருபது நாள் கொள்ளவும்.

## இஞ்சிச் சூரணம்

| | |
|---|---|
| இஞ்சி | கொடிவேலிப்பட்டை |
| வசம்பு | இந்துப்பு |
| கடுக்காய் | சீரகம் |
| பெருங்காயம் | கோஷ்டம் |
| சுக்கு | |

இந்தப்படியே வகை ஒன்றுக்கு விராகனிடையாகச் சேர்த்து சூரணம் செய்துக்கொண்டு காலமே வெந்நீரில் கொள்ளவும். தீரும் வியாதி:- வாந்தி, அரோசிகம், நீர்ப் பாண்டு, குன்மம் தீரும்.

## பரங்கிப்பட்டைச் சூரணம்

பரங்கிப்பட்டை சூரணம் செய்து அந்த நிரைக்கு மிளகு, திப்பிலிமூலம், தாம்பரபர்மம், சுக்கு, இஞ்சிச்சாரி சூரணம், பன்னிரெண்டு சூரணம் கலந்து, காலமே தேனில் கொள்ளவும். அந்திக்கு பசுவின் நெய்யில் கொள்ளவும். தீரும் வியாதி:-சூலைக்கடுப்பு, இடுப்பு கடுப்புவலி இவைகள் தீரும்.

## சூரண வகைகள் முற்றிற்று.

---

# புடம்போடும் வகைகள்

| | | |
|---|---|---|
| காடை புடம் | விரட்டி | 2 |
| கவுதாரி புடம் | .... | 3 |
| குக்கிடம் | .... | 10 |
| ஏனம்வைராகம் | .... | 50 |
| கெல புடம் | .... | 100 |
| கனப் புடம் | .... | 1000 |

## எரிப்பு

| | | |
|---|---|---|
| தீபம் | விரகு | 1 |
| கமலம் | .... | 2 |
| கடாக்கினி | .... | 475 |

விரகு ஒருசாண் நீளம் இரண்டுவிரல் கனதியா யிருக்க வேண்டும்.

புடம்போடும் வகைகள் முற்றிற்று.

மூன்றவது

# செந்தூர வகைகள்

## அயக்காந்தச் செந்தூரம்

அயப்பொடி பலம் 2 | ஊசிக்காந்தம் பலம் 2

இவை இரண்டையும் கல்வத்தில் போட்டு பொத்தலை கையாந்தகரைச் சாறுவிட்டு ஆட்டி ரவியில்வைத்து அரை கெசம் புடம்போடவும்; இப்படி ஏழுதரம் போட்டால் செந்தூரமாகும். அதையெடுத்து சிமிளி லடைத்துக்கொள் ளவும்; தீரும் வியாதி:- நீராம்பல், நீர்க்கோவை, நீரேரும் சோகை, பாண்டு இவைகளுக்கு தேனில் கொடுத்தால் தீரும். வாய்விஞல் அடுத்த வியாதிகள் தீரும். பத்தியம்: உப்பு கூட்டிக்கொள்ளவும்; கால் மண்டலம் அல்லது ஒரு மண்டலம் சாப்பிட வியாதி தீரும்.

## அயச் செந்தூரம்

அயப்பொடியை எலுமிச்சம் சாற்றில் ஊரப்போட்டு நரளைச்சாற்றில் அரைத்து மூன்று புடம்போட செந் தூரமாகும்.

அரப்பொடி பலம் 2 ஐந்து எலுமிச்சம்பழச் சாற்றில் ஊரவைத்து ஒரு ஓட்டில் போட்டு மாவிலிங்கம் இலை அரைத்து இரண்டு கொட்டைப்பாக்களவு கலந்து ரவியில் வைக்கவும்; காய்ந்தபிறகு யெடுத்து கல்வத்தில் போட்டு தூள்செய்து வைத்துக்கொண்டு,

மிளகு பலம் 1 வருத்து வடிகட்டி, நெய் பலம் 1, சர்க் கரை பலம் 1 லேகியமாய் செய்துக்கொண்டு 1¼ விராக

னிடை செந்தூரத்தைச் சேர்த்து வேளை ஒன்றுக்கு ½ விராகனிடை ஒரு நாளைக்கு ஏழுவேளை கொடுக்கவும்; பாண்டு வகை சோகையெல்லாம் தீரும்.

## அரிதாரச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| ரசம் | விராகனிடை 1 | அரிதாரம் | விராகனிடை 1 |
| கெந்தகம் | .... 1 | மனோசிலை | .... 1 |

தாம்புரம் விராகனிடை 15 யெடுத்து ஈசலிரகுபோல தட்டி முரித்து பொடிசெய்துக்கொண்டு இம்மருந்துடன் செப்புப்பொடியும் கூட்டி எருக்கம்பால் விட்டுப் பிசரி புது கலசத்திலிட்டு சீலைமண்செய்து ஒரு சாமம் புடம் போட செந்தூரமாகும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | விராகனிடை 1 | திப்பிலி | விராகனிடை 1 |
| மிளகு | .... 1 | | |

இவைகளை பொடிசெய்து மேல்படி செந்தூரத்துடன் கலந்து இரண்டு பணவிடை யெடுத்து தேன், சர்க்கரை, வெல்லம், இஞ்சிச்சார் இதுகளில் ஏதாகிலும் ஒன்றில் கொடுக்கலாம்.

## காடிகாரச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| காடிகாரம் | விராகனிடை 1 | சாதிலிங்கம் | விராகனிடை 3 |

இரண்டையும் சேர்த்து அரைத்துக்கொண்டு பணவிடை அல்லது அரைப்பணவிடை சர்க்கரையிலாவது தேனிலாவது கொடுக்கவும்; தீரும் வியாதி:- சுரம், சன்னி வாய்வுக்கு சுக்குத்தூளாவது பனவெல்லத்திலாவது கொடுக்கவும்; உதிரசசிக்கல், விரைவாதம், அண்டவாதம், வாதசன்னி, சிலேத்துமம் சுரத்திற்கு துளசியிலையில் கொடுக்கவும்; பததயம: மாமிஷாதிகள் சேர்ககக்கூடாது.

4

## லோகச் செந்தூரம்

அரப்பொடி கொண்டுவந்து நன்றாகக் கழுவி எலுமிச் சம்பழச்சாற்றில் இரண்டு சாமம் ஊறவைத்து கழுவி குழிக் கல்லில் போட்டு நெல்லிக்காய்ச் சாறுவிட்டு அரைத்து ஏழு புடம்போடச் செந்தூரமாகும். இரண்டு பணவிடை பன வெல்லத்தில் கொள்ளவும்; சோகை, காமாலை தீரும்; கடும் பத்தியம்.

## தாளகச் செந்தூரம்

தாளகம் வேணது கொண்டுவந்து அடுப்புக்கூட்டி புதுச்சட்டியைக் காயவைத்து தட்டிலே தாளகத்தைப் போட்டு முள்ளு முருங்கக்கழியைக் கொண்டுவந்து ஒரு முழக்கழி கருக்கி அந்தக் கழியிலே கடைந்து பார்க்கச் செந்தூரமாகும். அதை யெடுத்து சிமிளில் வைத்துக் கொள்ளவும். மேகத்தோடுகூடின வியாதிகளுக்கெல்லா மாகும்; வெட்டைக்கு இளநீரில் பணவிடை செந்தூரம் கொடுக்கவும்; பிரமியத்துக்கு சீனிசர்க்கரையிலாவது பசு வின் நெய்யிலாவது கொடுக்கவும்; ரத்தபித்தத்துக்கு வில்வயிலை கியாழத்தில் பணவிடை கொடுக்கவும்.

## ரசச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| ரசம் | விராகனிடை 4 | கெந்தகம் | விராகனிடை 2 |
| மனோசிலை | .... 2 | | |

முருங்கையிலைச் சார்விட்டு அரைத்து வழித்து குகை செய்து அந்த குகைக்குள்ளே முன்னரைத்துகட்டி வழித் ததை வைத்து சீலையிலே பொட்டளம் கட்டி சட்டியில் மணல் பாதிகொட்டி அதற்குள்ளே வைத்து மேலே மணல் கொட்டி அடுப்பில் வைத்து மூன்று சாமம் எரிக்க சட்டி மேல் கைவைத்துப் பார்த்தால் மணல் சுட்டதின் பிறகு எடுத்தால் செந்தூரமாகும்.

## சண்டமாருதச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| கெந்தகம் | விராகனிடை 1 | லிங்கம் | விராகனிடை 8 |
| ரசச்செந்தூரம் | .... 1 | வீரம் | .... 1 |
| பூரம் | .... 4 | சர்க்கரை | .... 1 |

இவைகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு இருசாமம் அரைக்க வர்ணம் பவழநிறமாகும் இந்த செந்தூரத்தை குடுக்கையில் அடைத்து வைத்துக்கொண்டு பணவிடை செந்தூரம் பேயன் வாழைப்பழத்தில் நடுவில் வைத்து விழுங்கி விடவும். இதில் தீரும் வியாதி:- சன்னிபதிமூன்றும் அதிசார பேதி, பவுத்திரம், வாதங்கள், சூலை, பாரிசவாய்வு, பாண்டு, விரைவாதம், முகவூதல், காமாலை, சோகை, புத்து, அலறு சன்னி, அண்டவாதம், பதினெட்டு குஷ்டம், நாகபாம்பு கடி, பூரான்கடி, குன்மங்கள், காக்கைவலி, சூசிகவாய்வு, அசதி, கணுவாதம் புண், கிரந்தி, வெடி சூலை, பசியறும் சூலை யெரிவு, பக்கவலி, மகோதிரம், மண்டைகுத்தல், குதிரைவலி, குமரகண்டவலி, கண்டமாலை, நாய்கடி, எலி கடி, வல்லிவிப்புருதி, பெருஜுரம், பித்தம், தொடைவாழை, கறப்பான், மதுமேகம் இவைகள் யாவும் தீரும். கடும் பத்தியம்; மறுபத்தியத்தில் மிளகு, சிறுகீரை, செருப்பு நெரிஞ்சி, அருகன்கட்டை, நீலம் இவை ஐந்தும் சிதான மாகப் போட்டு தீய வறுத்து தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஐந்துநாள் மறுபத்தியத்தில் இருவேளையும் அரை ஆழாக்கு பிரமாணம் குடித்து வந்த பின்பு இரண்டுநாள் கியாழமிட்டு ஓமம் தேய்த்து ஸ்நானம் பண்ணவும். ஒரு வாரத்துக்குப் பின் எண்ணெய் ஸ்நானம்.

## அயக்காந்தச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| கெந்தி | விராகனிடை 20 | இரசம் | விராகனிடை 10 |
| பலகைகாந்தம் | .... 10 | அரைப்பொடி | .... 10 |

இவைகளை கற்றாழைச் சாறுவிட்டு ஆறுசாமம் அரைத்து சிறு பில்லைகளாய்பண்ணி உலரவைத்து சட்டியில் கடாக்கினியாய் ஆறுசாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து அதை மறுபடியும் கல்வத்திலிட்டு கற்றாழைச்சாறு வேண்டியதை கல்வத்தில் போட்டு இரண்டு சாமம் அரைத்து சின்னபில்லை செய்து ஒட்டில் வைத்து 10-எருவில் புடம் போட்டு எடுத்து சுத்திபண்ணின லிங்கம் பலம் 1 சேர்த்து கல்வத்தில் நுணிக்கி செந்தூரத்தை வைத்துக் கொண்டு வேண்டிய வியாதிகளுக்கு கொடுக்கவும்; அரப்பொடி பழச்சாற்றில் சுத்தி செய்யவும்.

## கல்லுப்பு செந்தூரம்

கல்லுப்பைக் கொண்டுவந்து குளிமிட்டான் இலையையும் குப்பைமேனியிலையையும் கொண்டுவந்து ரசம் பிழிந்துவிட்டு அரைத்து பில்லை தட்டி காயவைத்து முழப்புடம் போடவும்; இப்படி ஏழுபுடம் போடவும் செந்தூரமாகும்.

## உப்பு செந்தூரம்

கல்லுப்பு படி ¼, ஆடுதின்னாப்பாளை சாறு படி ½, உப்பு அழுக்குபோக கொஞ்சம் தண்ணீரில் அலசிப் போட்டு வெய்யலில் காயவைத்து அதன்பின்பு உரலில் போட்டு இடித்து சட்டியில் போட்டு அடுப்பிலேற்றி ஷை சாற்றை அதில் கொஞ்சம் கொஞ்சமாய்விட்டு மர அகப்பையினால் திராவிக் கொடுக்க கொடுக்க அது கருப்பாய்ப் போகும். அதையெடுத்து கல்வத்தில் போட்டு ஆடுதின்னாப் பாளை சாறுவிட்டு அரைத்து 4 பில்லைதட்டி வெய்யலில் காய வைத்து அதன்பின் சீலைமண் செய்து 8 விரட்டியில் புடம் போடவும்; செந்தூரமாகுமட்டும் திருப்பதிருப்பப் புடம்

போடவும்; எட்டாவது அல்லது கடைசி புடத்துக்கு மருந்தை அரையணா பைசா அளவு பெரியதாய்ச் செய்து காயவைத்து தீ அதிகமாய்ப் போடாமல் இரண்டு மூன்று விரட்டியில்புடம் போடவும். தீரும்வியாதி:- இருமல் சுவாச காசம் க்ஷயம் குன்மம் வயற்றுவலி மயக்கம் சூதகவலி முதலானதுக்கு கொடுக்கவும்.

## காந்தச் செந்தூரம்

ஊசி காந்தத்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துகாயவைத்து கெஜப்புடம் போட செந்தூரமாகும். எருமைப்பால் அரைசேர் காய்ச்சி ஆடை யெடுக்காமல் காந்த செந்தூரம் போட்டு கொடுத்து பத்தியமாய் இருக்க வேண்டும். மூன்று நாள் நீர் சுருக்குத் தீரும்.

## செந்தூர வகைகள் முற்றிற்று.

நான்காவது

# பற்ப வகைகள்

## இரச பற்பம்

இரசம் விராகனிடை இரண்டு வாங்கி மஞ்சள் பொடி செய்து இரண்டு நாழிகை அரைத்து ஊறிப்போட்டு பன மட்டையை வாட்டி பிழிந்து மூன்றுசாமம் அரைத்து வில்லை தட்டி வெய்யலில் காயவைத்து ஒட்டில் வைத்து ஓடு மூடி மூன்று சீலமண் செய்து கோழிபுடம் போட பற்பமாம்; இந்த பற்பம் மேகம் 201 - க்கும் அனுபானம் வெல்லத்தில் கொடுக்கவும்; இச்சாபத்தியம்.

## அண்ட பற்பம்

மூன்று முட்டை லிங்கம் ஈயச்செந்தூரம் வகை 1-க்கு 5 மூன்று பங்காக்கி மூன்று முட்டைக்குள் போட்டு சிறு கீரையரைத்து கவசம்பண்ணி அதின்மேல் சீலமண் செய்து காயவைத்து 10 விரட்டி கீழே, மேலே 5 விரட்டி புடம் போட்டு யெடுக்கவும்; அனுமானம்: சுக்கு மிளகு திப்பிலித் தாளில் கற்கண்டு அல்லது சர்க்கரை பலம் 2 லேகியமாய் கிளறி சிறுநெல்லிக்காய் களர்ச்சிக் காயளவுக்குள்வைத்து 9 வேளை சாப்பிடவும்.

## அரிதார பற்பம்

அரிதாரம் பலம் 1 சுண்ணாம்பில் 7 தரம் சுத்திசெய்து வெள்ளை நத்தையோடு சேர்த்து தூள்பண்ணி விந்திஞல் அரைத்து பில்லைசெய்து 15 75 வில் ஒருமுழுப்புடம் போடவும்; தீரும் வியாதி:- ஈளை காசம் நாய்கடி சுக்கில் வைத்து கொடுக்கவும்,

## தாளக பற்பம்

தாளகம் பலம் ½ சுக்கான் சுண்ணும்பில் சுத்திசெய்து செம்பருத்தியிலேச் சாறுவிட்டு சாமம் அரைத்து பில்லே தட்டி காயவைத்து பூவரசம்பட்டையை சுட்டு கருகலா யிருக்கும்போது ஒரு கலசத்தில் அரைப்படி சாம்பல் போட்டு அதன்மேல் பில்லையை வைத்து அதன்மேல் அரைப்படி சாம்பலே வைத்து நன்றுய் அப்பி வில்லே போட்டு மூடி காயவைத்து ஆறு விரட்டியில் புடம் போட வும்; கடும்பத்தியம்.

தீரும் வியாதி:- இருமல், சயம், சுவாசகாசம், மந்தார காசம் இவைகள் தீரும்.

## தாளக பற்பம்

பனிநீர் படி 1, குடியோட்டிப் பூண்டு சாறுப படி 1 இரண்டையும் கலந்து ஒரு புதுப்பானையில் ஊற்றி 1 பலம் தாளகத்தை ஒரே கட்டியாய்வாங்கி நூலினுல்கட்டி சாறுக் குள் பானை அடியில் தட்டாதபடி மருந்தை மத்தியில் தொங்கவிட்டு தென்ன மட்டை விரகால் எரித்து சாறு சுண்டின பிறகு தாளகத்தை யெடுத்து ஈணுக்கிடாரி சாணிக்குள் வைத்து மூன்று சீலேமண் செய்து 8 எருவில் அரையே அரிக்கால் முழம் புடம்போட பற்பமாகும்.

தீரும் வியாதி:- சுரத்துக்கு ஒரு அரிசி எடை ஒரே விசை கொடுக்கவும்; நாள் பட்ட சுரங்களெல்லாம் தீரும். வயற்று வலிக்கும் கொடுக்கலாம் இச்சாபத்தியம்.

## கெந்தக பற்பம்

புளி நருளேயிலேயை மாங்காய் திட்டம் அரைத்து நெல்லிக்காய் கெந்தகத்தை அதற்குள்ளாகப் பொதிந்து சீலேமண் செய்து முழுப்புடம்போட பற்பமாகும்; சகல மேகத்துக்கும் நெய்யில் கொடுக்கவும்.

## தாம்பர பற்பம்

நீர்மேல் பச்சிலையும் வாளமுஞ் சேர்த்தரைத்து சல்லிக் கவசம் கட்டி முப்பது விரட்டியில் புடம்போட பற்பமாகும்.

## வங்க பற்பம்

சுக்கான்கல்லை முரிக்கிலைச்சார் விட்டு ஒரு தேங்கா யளவு அரைத்து அதற்குள்ளாக வங்கத்தை வைத்து நன்றாய் காயவைத்து அதின்மேலே கருப்புச் சிறுட்டத்தை தேன்விட்டரைத்து பூசிக் காயவைத்து கெஜப்புடம்போட பற்பமாகும்.

## துருசு பற்பம்

துருசு கட்டிக்கு அம்மாம் பச்சரிசியிலை பதினைந்து நாள் கவசம் செய்து காயவைத்துப் புடம்போட பற்பமாம்.

## தங்க பற்பம்

ஆகாயத்தாமரை அரைத்து தேங்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து தங்கத்தகட்டை யதனுள் வைத்து காட்டெரு இருபதில் புடமிடவும்.

## நில ஆவாரை பற்பம்

நிலாவாரைச்சமூலம் கொண்டு வந்து நிழலிலுலர்த்திப் பொடி செய்து சுரக்குடுக்கையி லடைத்துக் கொள்ளவும். இப்பொடி சாப்பிடும் விதம்: மூவிரல் கொண்ட சூரணம் தேனில் கொள்ள உடம்பு பெருகும்; விளக்கெண்ணையில் கொள்ள எலிகடி தீரும்; வெண்ணையில் கொள்ள கிரிபூச்சி விழும்; மோரில் கொள்ள விஷம் தீரும்; பசுவின் கோமயத்தில கொள்ள சிறங்கு தீரும; ஆட்டுக்கோமயத்தில் கொள்ள குஷ்டம் தீரும; கருத்த ஆட்டுப்பாலில கொள்ள குழந்தைகளின் செவ்வாப்பு தீரும்; எருமைச்சாணிப்பாலில் கொள்ள பாண்டு தீரும்; பருத்திச் சாற்றில் கொள்ள செய்யான்கடி

தீரும்; எருமைப்பாலில் கொள்ள காணுக்கடி தீரும்; வேப்பஞ்சாற்றில் கொள்ள செவ்வட்டை கடிதீரும்; வேலம்பட்டைச் சாற்றில் கொள்ள பல்லுக்கொடைச்சல் தீரும். இப்படி அரை மண்டலம் ஒரு மண்டலம் சாப்பிட வியாதி தீரும். பத்தியமில்லை; இச்சாபத்தியம்.

## காரீய பற்பம்

காரீயத்தை உருக்கி இலுப்பெண்ணெயில் பத்துவிராகனிடை சாய்த்து பெடுத்துக்கொண்டு கருநொச்சியிலை அரைத்து குகைபண்ணி அதில் முன் காரீயத்தைவைத்து மேல் குகைமூடிச் சீலைமண் செய்து ஒரு முழப்புடத்தில் போடவும்; பற்பமாம். சகல நீரிழிவும் நீர்ச்சுருக்கும் இதுகளுக்குப் பசுவின் நெய்யில் கொடுக்க குணமாம். இச்சாபத்தியம்.

## பவழ பற்பம்

பவழம் கொண்டு வந்து ஒருகலசத்தில் கூமறிச்சோறு பறப்பி அதற்கு மேலும் சோறுபறப்பி மேலும் பவழம் பறப்பி மேலே சீலைமண் செய்து கெசப்புடம் போடவும்.

## கலன்கொம்பு பற்பம்

கலன்கொம்பு வேணது எடுத்து தீயில் போட்டு எரித்து தட்டிக் கலுவத்திலிட்டு எலுமிச்சம் பழம் சார்விட்டரைத்து ஒடு வட்டமாகத் தட்டி பில்லைபண்ணி ஒட்டில் வைத்து மேலோடு போட்டு மூடி சீலைமண் செய்து கோழிப் புடம் போட பற்பமாகும்; மேகத்துக்கு கொடுக்கலாம்.

## குமறி பற்பம்

| | | | |
|---|---|---|---|
| கெந்தகம் விராகனிடை | 12½ | ரசம் கழஞ்சி விராகனிடை | 5 |
| அறப்பொடி .... | 205 | காந்தம் கழஞ்சி .... | 3 |

இதை கற்றாழஞ்சார்விட்டு நன்றாக அரைத்து அதை கலசத்திலிட்டு அடைபோல் ஒரு எருமுட்டை யகலத்தில்

தட்டி மேலும் ஒரு கலசங்கொண்டு மூடி வெய்யலுக்கெதிராக ஒரு சாமமிருக்கவைத்து எடுக்க பற்பமாக விருக்கும் அத்துடனே திரிகடுகு, திரிபாலை, சீரகம், கருஞ்சீரகம் இந்துப்பு, விழாவரிசி இது வொவ்வொன்று ஒரு காசிடை கூட்டி நன்றாய் சூரணம் பண்ணி முந்தின பற்பத்துடனே கலந்து வைத்துக் கொள்ளவும்; இதில் தீரும் வியாதி:- சகல குன்மத்திற்கும் இடப்பட்ட பொழுதிலாவது ஒருகாசிடை பற்பம் இட சகல குன்மம் கிறாணி வயறுபொருமல் அக்கினிமந்தம் இதுகள் தீரும்; இச்சாபத்தியம்.

## சீமை கல்நாற் பற்பம்

சீமைக் கல்நார் கொண்டுவந்து அகத்திக்கீரைச் சாற்றில் மூன்று நாள் ஊரப்போட்டு பின்பு எடுத்து அந்த ரசத்தில் அரைத்து பில்லையாகத் தட்டி காயவைத்து அகலில் வைத்து சீலை செய்து முழுப்புடம் போடவும்.

## நாட்டுக் கல்நார் பற்பம்

நாட்டுக் கல்நார் கொண்டுவந்து பழச்சாற்றில் மூன்று நாள் ஊரவைத்து குடுவையில் அல்லது ஓட்டில் வைத்து கொஞ்சம் சார்விட்டு மேலே சீலைமண்செய்து முழுப்புடம் போடவும்.

## அரிதார பற்பம்

பொன் அரிதாரம் பலம் ஒன்று கொண்டுவந்து பிரம்ம தண்டி பாலில் தடவி வைக்கவும். இப்படியே பத்து தினம் தடவி காயவைத்து பின்பு புளியங்கிராணி கொண்டு வந்து கொளுத்தி இரண்டுபடி சாம்பலெடுத்து ஒரு குடுவையில் ஒரு படி சாம்பலை அடியில்போட்டு அதின்மீதில் கட்டியை வைத்து அதன்மேல் ஒருபடி சாம்பலை போட்டு அடுப்பின் மீதில் வைத்து நாலு ஜாமம் எரிக்கவும் பற்பமாகும்.

## பொட்டிலுப்பு பற்பம்

பொட்டிலுப்புக் கொண்டுவந்து ஒரு குடுவையில் பூவரசன் பழுப்பு ஐம்பது அடியில் போட்டு அதற்குமேல் உப்பு கட்டிவைத்து அதன்மேல் ஐம்பது பழுப்புபோட்டு அடுப்பில் வைத்து இலை கருக புகை அடங்கின பிற்பாடு எடுக்கவும்.

## கல்லுப்பு பற்பம்

குளிவிட்டான் இலையைக் கொண்டுவந்து ரசம் பிழிந்து கல்லுப்பை கல்வத்திலிட்டு இரண்டு ஜாமம் அரைத்து ஐம்பது எருவில் புடம் போடவும்.

## வெள்ளை பாஷாண பற்பம்

வெள்ளை பாஷாணம் கொண்டுவந்து அகல செங்கல் லில் பள்ளம் தோண்டி அதில் வைத்து செப்புக் கிண்ணம் கொண்டு அதின்மேல் மூடி சந்துவாய்க்கு சாம்பிராணி போட்டு உருகிப் பிடித்துக்கொண்டபிறகு அடுப்பின்மேல் வைத்து வெள்ளாட்டுக் கோமயத்தை கிண்ணத்தின்பேரில் விட்டுக்கொண்டே இருக்கவும்; இப்படி நாலு ஜாமம் சுருக்குக் கொடுக்கவும்.

## பூர பற்பம்

| | | | |
|---|---|---|---|
| பூரம் | பலம் 1 | படிகாரம் | பலம் 2 |

படிகாரத்தை சட்டியிலிட்டு அடுப்பேற்றி தீபாக்கினி யாக எரிக்கையில் படிகாரம் உருகிவரும்; உருகின சமயம் பார்த்து பூரத்தை அதினடுவில் சொருகி எரித்துக்கொண் டிருக்க, படிகாரம் நன்றாய் பூர்த்தபின் எடுத்து பொடித்து சீசாவில் வைத்துக்கொண்டு இளநீரில் 2-அரிசி யிடை போட்டு குடிக்க மார்சளி, கபம், கோழை, இருமல் இவை கள் தீரும்; இச்சாபத்தியம்.

## பற்ப வகைகள் முற்றிற்று.

ஐந்தாவது

# மாத்திரை வகைகள்

## பேதிக்கு பூபதி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சுக்கு விராகனிடை | 1 | ரசம் விராகனிடை | 1 |
| வெண்காரம் .... | 1 | நேர்வாளம் .... | 3 |
| நெல்லிக்காய் கெந்தகம் | 1 | | |

இவ்வைந்தும் கல்வத்திலிட்டு குளிர்ந்த தண்ணீர் விட்டு ஒரு சாமம் அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு ஒரு மாத்திரையும், பெரிய மனுஷர்களுக்கு வயிற்றுப்பிசமா யிருந்தால் இரண்டு மாத்திரை அல்லது மூன்று மாத்திரை கொடுக்க பேதியாகும்.

## வயிற்றுவலிக்கு மாத்திரை

வீரம் ஒரு மிளகுயெடை எடுத்துக்கொண்டு அதில் ஐந்து மிளகு சேர்த்து கல்வத்திலிட்டு நல்லஜலம் விட்டரைத்து ஆறு மாத்திரைசெய்து வைத்திருந்து வேளை ஒன்றுக்கு ஒரு மாத்திரை சுக்கு கியாழத்தில் கொடுக்கவும்.

## இரவு அயராது மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| வாளம் விராகனிடை | 1 | கரியபோளம் விராகனிடை | 2 |
| சூரத்து ஆவாரைத்தூள் | 4 | | |

வெந்நீர் விட்டரைத்து மாவு தொட்டுக்கொண்டு பெரிய குண்டுமணி பிரமாணம் உருண்டைசெய்து நிழலி லுலர்த்தி சாப்பிட்டு சாமத்துக்குமேல் 3-4-5 வாயில்

போட்டு இளவென்னீர் கொப்பளித்து முழுங்கவும்; விடிய காலத்தில் பேதியாகும்; பத்தியமில்லை,

## வெட்டிவேர் மாத்திரை

வெட்டிவேர் வடக்கேபோகிற வேர் வெட்டிவந்து மேல்பரணி சீவிப்போட்டு பட்டையை யெடுத்து எலுமிச் சம்பழச் சாற்றில் ஐந்து நாள் ஊரவைத்து தேத்தான் கொட்டை பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, 1 கிறுணிக்கு சுக்கு கியாழத்திலிடவும். 2 அஜீரணத்துக்கு ஓமம் பொடியில் கொடுக்கவும். 3 மூத் திரபாதைக்கு பசுவின்பாலில் கொடுக்கவும். 4 பெருங் காயம் கூட்டிய தண்ணீரால் குடிக்க எல்லா விஷமுந் தீரும். நெய்யில் விழுங்க பெருவயிறு சூலையுந் தீரும். 5 கோமயத் தில் குடிக்க ஊதுவாதம் சோகையும் தீரும். 6 வேப்பெண் ணெயில் சாப்பிட கருங்குஷ்டம் கடிவிஷம் தீரும். 7 மஞ் சள் பொடியில் கூட்டிட சூலை குன்மம் தீரும். 8 வெக் காய்ச்சலுக்கு பஞ்சமூலிகை கியாழத்திலிடவும். 9 மாந்தத் துக்கு பேய்முசிட்டை கியாழத்திலிடவும். 10 அதிசாரத் துக்கு மாதளம்பூ கியாழத்திலிடவும். 11 வாந்திக்கு நிலா விரை கியாழத்திலிடவும். 12 கிரிச்சுக்கு அருகம்வேர் கியாழத்திலிடவும். 13 சூலைவாய்வுக்கு சீரகக் கியாழத்தி லிடவும். சூலைக்குடோரி முற்றிற்று.

## நாலாமுறை காய்ச்சலுக்கு மாத்திரை

சுத்திசெய்த ரசம்
கெந்தகம்
தாளகம்
மனோசிலை
துற்றம்
தாம்பர பற்பம்
துருசு
கெவுரி பாஷாணம்
கற்பூர சிலாசித்து

இதுகளையெல்லாம் சமனாகக்கூட்டி துளசிச் சாற்றில் மூன்றுநாள் அரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி அந்த சுக்கு சாற்றில் ஒரு மாத்திரை உரைத்துக் கொடுக்கவும். இராத்திரியில் அடிக்கிற சுரங்கள் நாலாமுறை காய்ச்சலும் தீரும்.

## குளிர் காய்ச்சலுக்கு சீதா ராமபாணம்

வெள்ளைப் பாஷாணம் பாகத்தளச் சாற்றில் ஒருநாள் அரைத்து மூன்றுநாள் சிறுநீர் வார்த்து அரைத்து மூன்று நாள் மிளகுத்தக்காளிச்சார் வார்த்தரைத்து பாசிப்பயறு பிரமானம் மாத்திரைச் சேர்த்து நிழலுணர்த்தலாய் உணர்த்தி பதனம் பண்ணவும். ஒரு மாத்திரை சுக்கு கியாழத்தில் கொடுக்கவும். பாசிப்பயறு கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். வாந்தி காணும்; அதற்கு பிரிதிசாதத்தில் கஞ்சி வார்த்து கொடுக்கவும். இந்தப்படிக்கு மூன்றுநாள் மாத்திரை கொடுக்கவும்; குளிர்க்காய்ச்சல் தீரும்.

கோழிக்காரம் அரிதாரம் பூதுழச்சிச்சாரம் வார்த்தரைத்து பாசிப்பயாளவு மாத்திரைகள் செய்து நிழலுணர்த்தலாய் உணர்த்தி வைக்கவும். ஒரு மாத்திரை பூதுழச்சாற்றிலே உரைத்து மூன்றுநாள் கொடுக்கவும். குளிர்க்காய்ச்சல் நிற்கும்; கஞ்சிகாய்ச்சி கொடுக்கவும்.

## கிருணிவச்சிர கபாட மாத்திரைகள்

| | |
|---|---|
| சாதிலிங்கம் | அட்டவாளிவிரை |
| சுக்கு | மாம்பிசினி |
| வெண்காரம் | விலாம்பிசினி |
| திப்பிலி | ஆவாரம் வேர்பட்டை |
| நற்பாலைவேர் | கரிவேலம் வேர்பட்டை |
| நீர்முள்ளிவிரை | கருஞ்சீரகம் |

| | |
|---|---|
| மிளகு | இலவம்பிசினி |
| சாதிக்காய் | காசிகட்டி |
| சாதிபத்திரி | புளியம்விரைஒடு |
| கிரும்பு | வேப்பம்பிசினி |
| கழற்சிபருப்பு | ஓமம் |
| அதிவிடையம் | சீரகம் |

இவைகளை வகைக்கு இரண்டு விராகனிடையாக அதற்குச் சமனாக அபின் கூட்டி நற்பாலை இலைச்சாரம் விட்டு நாலுநாளரைத்து நற்பாலையிலை கியாழம் வைத்தரைத்து வாழைப்பூசாரம் மூன்றுநாள் வார்த்தரைத்து ஊமத்தம் பூச்சாரம் விட்டு மூன்றுநாள் அரைத்து பயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுணர்த்தி பதனம் பண்ணவும்; பத்தியம்: சாதமும் வென்னீருமாகக் கொடுக்கவும்.

## ஜன்னி சுரத்துக்கு மகாவயிரவ ரசம்

| | |
|---|---|
| நாபி | இருபி |
| கெந்தகம் | நிறுவிஷம் |
| வெண்காரம் | நவச்சாரம் |
| தாம்பிர பற்பம் | சலாசித்தி |
| சாதிலிங்கம் | கரியபவழம் |
| தாளகம் | ஊசிக்காந்தம் |
| மனோசிலை | ஊமத்தம்விரை |
| வெள்ளை பாஷாணம் | சுக்கு |
| கெவுரி பாஷாணம் | திப்பிலி |
| துத்தம் | மிளகு |
| துருசு | சித்தரத்தை |
| அபிரேகம் | |

இது சமனாகக்கூட்டி ஊமத்தளைச் சாற்றினால் பாகத்தளைச் சாற்றினால் இஞ்சிச்சாற்றினால் ஒவ்வொரு சாற்றி

ஞல் மூன்று நாள் ஒன்பது நாளரைத்து எள்ளு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுணர்த்தலாய் உணர்த்தி தேங்காய்க் குடுக்கையில் மாத்திரையை வைத்து தவசத்தில் ஒருமாதம் புதைத்து பதனம் பண்ணவும்; ஞாயிறு வருஷத்துக்கு யிருக்கும். ஒரு மாத்திரை இஞ்சிச் சாற்றிலாவது சுக்கு சாற்றிலாவது உரைத்துக் கொடுக்கவும். சன்னிசுரம், குளிர்காய்ச்சல் தீரும்.

## குளிர்காய்ச்சலுக்கு ப்ரதாபருத்திர ரசம்

| | |
|---|---|
| வெள்ளைபாஷாணம் | காந்தம் |
| ரசம் | நவச்சாரம் |
| அரிதாரம் | கரியபவழம் |
| மனேசிலை | வெண்காரம் |
| துருசு | துத்தம் |

இதுகளை சமனுக நிறுத்துக்கொண்டு ஊமத்தஞ்சாற்றில் மூன்றுநாளரைத்து பாகைத்தழைச் சாற்றில் மூன்று நாளரைத்து துவரைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுணர்த்தலாய் உணர்த்தி தேங்காய் குடுக்கையில் அடைத்து முப்பது நாளைக்குப்பிறகு தவசத்தில் புதைத்து யெடுக்கவும். ஒரு மாத்திரை இஞ்சி சாற்றிலாவது சுக்கு கியாழத்திலாவது கொடுக்கவும்; குளிர் காய்ச்சல் நிற்கும். பத்தியம்: உப்பில்லாமல் அரிசியுடனே பாசிப்பயறு கூடப் போட்டு கஞ்சிகாய்ச்சி கொடுக்கவும்.

## சகல சுரங்களுக்கு அழகிய சொக்கன் குளிகைகள்

| | |
|---|---|
| நாபி | துத்தம் |
| சாதிலிங்கம் | துருசு |
| அரிதாரம் | கடுகுரோகணி |
| கெவுரிபாஷாணம் | சுத்திசெய்த நேர்வாளம் |

இவைகளை சமனாக நிறுத்து பாகையிலைச் சாற்றினாலேயும் இரிசிச் சாற்றினாலேயும் சகாதேவியிலைச் சாற்றினாலேயும் துளசிச்சாற்றினாலேயும் கையாந்தகரைச் சாற்றினாலேயும் இதுவகைக்கு மூன்று நாளரைத்து கடுகுப் பிரமாணம் குளிகை செய்துக்கொண்டு நிழலுணர்த்தலாய் உலர்த்தி மிளகு பொடியுடனே ஒரு குளிகை கொடுத்தால் சீதசுரம் தீரும். பத்தியம்: அரிசியுடனே பாசிப்பயறு போட்டு கஞ்சி காய்ச்சி கொடுக்கவும்; அனுபானம் விசேஷங்களாய் கொடுத்தால் சர்வ சுரங்களும் தீரும்.

## குழந்தைகள் சுரத்திற்கு சாத்திர பேதி

| | |
|---|---|
| ஏலம் | அதிமதுரம் |
| கிரும்பு | சுக்கு |
| சாத்திரபேதி | மிளகு |
| கோரோசனை | ஓமம் |
| செங்கழுனிக்கோஷ்டம் | இலுப்பைப்பூ |
| திப்பிலி | நன்னாறிவேர் |
| கல்மதம் | சிறுபீளைவேர் |
| கல்நாரு | குமிளம்பட்டை |
| லவுங்கப்பட்டை | பெருமரத்துப்பட்டை |

இவைகளை சமனாகக் கூட்டி முலைப்பால் வார்த்தரைத்து பாசிப்பயரளவு மாத்திரைசெய்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி ஒரு மாத்திரை முலைப்பாலில் அரைத்துக் கொடுக்க குழந்தைகள் சுரம் தீரும்.

## குழந்தைகளுக்கு பேதிக்கு

¼ படி விளக்கெண்ணையில் கற்றாழைச்சோறு எலுமிச்சங்காயளவு இரண்டு கடுக்காயும் பொடி செய்து போட்டு மூன்று ஈருள்ளியும் தட்டிப்போட்டு காய்ச்சி

ஆறினபிறகு குழந்தைக்கு கொடுக்கவும்; பத்தியம்: கஞ்சி சாதம் கொடுக்கவும்.

## சுரத்துக்கு ஆனந்த வைரவன்

| | | | |
|---|---|---|---|
| சாதிலிங்கம் விராகனிடை | 2 | மனோசிலை விராகனிடை | 2 |
| நாவி .... | 2 | வெண்காரம் .... | 2 |
| கெந்தகம் .... | 2 | சுக்கு .... | 4 |
| மிளகு .... | 3 | திப்பிலி .... | 4 |

இவைகளெல்லாம் கூட்டி எலுமிச்சம் பழச்சார் விட்டு மூன்று ஜாமம் அரைத்து மிளகு குன்றி பிரமாணம் உருண்டை செய்து திரிகடுகு கியாழத்திலிடவும்; இப்படி மூன்று நாளிடவும். சர்வசுரமும் தீரும்.

## விஷ சுரத்திற்கு குளிகை

கெந்தகம் பச்சை நாவி இரதம் மிளகு நேர்வாளம் சுத்திசெய்ததும் கூட்டி பூனிவிரையிலிடப் பருப்பும் சேர் சமனாகக்கூட்டி இஞ்சிச்சார் விட்டரைத்து உளுந்து பிரமாணம் உருண்டையாய் குளிகை செய்து இஞ்சிச்சாற்றில் சாப்பிட விஷசுரம் தீரும்.

## சன்னிக்கு ரத்தினாதிக் குளிகை

| | |
|---|---|
| வெண்காரம் | கெந்தகம் |
| இரசம் | திரிகடுகு |
| இந்துப்பு | |

ஒவ்வொன்று களஞ்சு, நேர்வாளம் இரண்டுகளஞ்சு, ரோகனி நாலுகளஞ்சு சேரக்கூட்டி முலைப்பால் விட்டு ஒரு சாமமரைத்து உளுந்துபிரமாணம் உருண்டை செய்து ஒரு உருண்டை இஞ்சிச்சாற்றிலிடவும்; இன்னொரு உருண்டை மனோசிலை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து பயறு பிரமாணம் உருண்டையாக குளிகைசெய்து ஒரு குளிகை இஞ்சிச்சாற்றிலிடவும்.

## சுரத்துக்கு ஏலாதி குளிகை

| | |
|---|---|
| ஏலம் | இரும்பு |
| நெல்லிபருப்பு | காட்டெருமைப்பால் |
| சீரகம் | முந்திரிப்பழம் |
| மதுரம் | சந்தனம் |
| கொத்துமல்லி | சிறுகீரைவேர் |
| சுக்கு | |

இவைகளைச் சமனுகக்கூட்டி தயிர் தண்ணீர் விட்டரைத்து ஒரு களஞ்சு சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். தாகப்பிரமை தீரும்.

## சீத சுரத்திற்கு குளிகை

| | | |
|---|---|---|
| வெள்ளை பாஷாணம் | கழஞ்சு | 1 |
| துத்தம் | ,, | 2 |
| துருசு | ,, | ½ |

இவைகளை குழிக்கல்லி லிட்டு ஒரு சாமம் விடாமல் ஊமத்தஞ் சாறுவிட்டு மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி குளிர்வருகிற முறையிலே விடிய இரண்டு நாழிகை பொழுது ஒரு உருண்டை பசுவின் பாலில் கொடுக்கத் தீரும்.

## சுரத்திற்கு மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாவி | விராகனிடை | 8 | துத்தம் | விராகனிடை | 2 |
| கெந்தகம் | .... | 6 | துருசு | .... | 2 |
| அரிதாரம் | .... | 2 | வாளம் | .... | 2 |

இவைகளுக்கு சரிபாகம் தாம்பிர பற்பம் கூட்டி மத்தித்து குப்பைமேனி, துளசி, தும்பை, கையாந்தகரை இந்த நாலு வகை இலைச்சாறுவிட்டு மத்தித்து இரண்டு சாமம் அரைத்து பானையில் வைத்துக்கொண்டு காலையில்

பணவிடை தேனில் இஞ்சிச்சாற்றில் வெல்லத்திலிட, தீரும் வியாதி:- சுரம், தாபசுரம், சுவாசகாசம் தீரும்.

## வாலசஞ்சீவி மாத்திரை

சுக்கு, திப்பிலி, கிராம்பு, கருஞ்சீரகம், மிளகு, சாதிக்காய், சாபத்திரி, ஏலம், வாளம், சாதிலிங்கம் சரிகொண்டு எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து பயறளவு மாத்திரை திரட்டி வைத்துக்கொண்டு கடுகுரோகணி, கடுக்காய், சுக்கு கியாழத்திலிட சன்னி தீரும். பிள்ளைகளுக்குப் பாலில் கொடுக்கவும்; பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரையும், குழந்தைகளுக்கு ஒரு மாத்திரையும் கொடுக்கலாம்.

## வேறு விதம்

பிள்ளை பச்சிலைபோல் கழிந்தால் ஏலம், சாத்திரபேதி, அதிமதுரம் இதுகள் வகை ஒன்றுக்கு ½ விராகனிடை வாங்கி பழந்தண்ணீர்விட்டரைத்து மூன்று நாள் காலமே கொடுக்கத் தீரும்.

## பிள்ளைகளுக்கு சுரத்திற்கு மாத்திரை

சீரகம், கருஞ்சீரகம், வசம்பு, ஓமம், சுக்கு, கிராம்பு, வசுவாசி, மிளகு, சாதிக்காய், திப்பிலிபூண்டு, தாண்டிக்காய், நெல்லிமுள்ளி, கடுகு, சேர்வாளம் இதுகள் சமனிடை கொண்டு இஞ்சிச்சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு மாத்திரை முலைப்பாலில் கொடுக்க பிள்ளைகள் மாந்தம், சுரம் சகலமும் தீரும்.

## பெருவாரி காய்ச்சலுக்கு மாத்திரை

ஆடுதின்னாப்பாளை சூரணமும், லவுங்கப்பட்டை சூரணமும் சமனிடை கூட்டி எலுமிச்சம்பழம் சாறுவிட்டு அரைத்து குண்டுமணி பிரமாணம் உருண்டைபண்ணி

வைத்துக்கொண்டு புருஷருக்கு ஸ்திரீகளின் சிறுநீரிலும், ஸ்திரீகளுக்கு புருஷர்கள் சிறுநீரிலும் இப்படி மூன்றுநாள் இடவும். வென்னீரில் மூன்றுநாளிடவும். இதற்கு தீரும் வியாதி:- பெரிவாரி காய்ச்சல், அவசரக் காய்ச்சல், விச்சுரம், விடாதசுரம், ஒட்டுசுரம், குளிர்சுரம் இதுகள் தீரும்.

## விஷபேதிக்கு மாத்திரை

| | | |
|---|---|---|
| எட்டிவேர் வடக்கேபோகிறவேர் | விராகனிடை | 10 |
| நலச்சறுளிவேர் | .... | 5 |
| அளிஞ்சிவேர்ப்பட்டை | .... | 5 |

கடை சரக்கு திப்பிலி, சுக்கு, மிளகு, ஓமம், பெருங்காயம், வெள்ளை வெங்காயம் வகை ஒன்றுக்கு ஒரு விராகனிடை இதுகளெல்லாம் கூட்டி எலுமிச்சம்பழச்சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். விஷபேதி கண்டவுடனே ஒயின் ஒரு கிளாசு அதிலுரைத்துக் கொடுக்கவும்; சீமைக்காடியில் உரைத்துக் கொடுக்கவும்; ஓமக் கியாழத்தில் கொடுக்கவும். கடும்பத்தியம். எட்டிவேரை சிறுக நருக்கி பசுவின் கோமயத்தில் கொதிக்கவைத்தெடுத்தால் சுத்தியாகும், அதை காயவைத்து அரைக்கவும்.

## கோரோசனை மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | விராகனிடை | 1 | கோஷ்டம் | விராகனிடை | 1 |
| கோரோசனை | .... | 1 | விலாமிச்சைவேர் | .... | 1 |
| அதிமதுரம் | .... | 1 | சமுத்திரபச்சை | .... | 1 |
| சாத்திரபேதி | .... | 1 | செண்பகப்பூ | .... | 1 |
| வெட்டிவேர் | .... | 1 | | | |

இதுகளெல்லாம் முலைப்பால் விட்டரைத்து கடலை பிரமாணம் உருண்டைபண்ணி வைத்துக்கொண்டு சகலமான மாந்தம் கணத்துக்கும் முலைப்பாலி லிடவும். பெரிய மனிதருக்கு குடல்படுவன் சுரங்களுக்கு முலைப்பாலிலிடவும்.

சகல வியாதிக்கும் அநுபானமான கியாழத்திலிடவும். கடும்பத்தியம்.

## சின்னயேலாதி மாத்திரை

ஏலம், லவுங்கப்பட்டை, சீரகம், கோஷ்டம், அதிமதுரம், முந்திரிகைப்பழம், கிராம்பு, சாதிக்காய், வசுவாசி, ஒரிலைத்தாமரை, நன்னாரிவேர், பற்பாடகம், கோரோசனை இதுகள் வகை ஒன்றுக்கு விராகனிடை ஒன்று சேர்த்து இளநீர் விட்டரைத்து குண்டுமணி பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக்கொண்டு சுரத்துக்கு அநுபானங்களிடவும். மேகச் சூட்டுக்கு சீரக கியாழத்திலிடவும். பத்தியம்: மச்சம், புளி ஆகாது.

## சுரத்துக்கு மாத்திரை

| | | |
|---|---|---|
| சுண்ணாம்புகல்லில் சுத்திசெய்த தாளகம் விராகனிடை | | 1 |
| சுத்திசெய்த லிங்கம் | .... | 1 |
| சுத்திசெய்த நேர்வாளம் | .... | 1 |
| கடுகுரோகணி | .... | 1 |
| நொச்சிக்கொழுந்து | .... | 1 |

இந்த ஐந்து சரக்குகளையும் கல்வத்தில் பொடித்துக் கொண்டு பசும்பால் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுக்கு கியாழத்தில் நோய்பலத்துக் கேற்றுப்போல் கொடுத்தால் தீரும். இதை பேதிக்கு கொடுக்கவென்றால் மாத்திரை 4 பொடிசெய்து வாயில்போட்டு ஒருமுணர் சலம் சாப்பிடவும்.

## பாலபூபதி மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாளம் | விராகனிடை | 1 | கெந்தகம் | விராகனிடை | $\frac{3}{4}$ |
| சுக்கு | .... | $\frac{1}{2}$ | சூதம் | | வீசம் |
| வெண்காரம் | .... | $\frac{1}{4}$ | | | |

இவைகளை வென்னீரில் 4 சாமம் அல்லது 3 சாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம்செய்து வாழைப் பழத்திலாவது, பனைவெட்டிலாவது, அதிமதுரம் கியாழத்தி லாவது சாப்பிடவும்.

## வாலசஞ்சீவி குளிகை

சுக்கு, திப்பிலி, மிளகு, லிங்கம், வெண்காரம், கிராம்பு, ஓமம் இந்த ஏழு சரக்கையும் சமனிடை வாங்கி கல்வத்தி லிட்டு பழச்சாற்றால் நன்றாயாட்டி உளுந்து பிரமாணம் குகைபண்ணி நிழலிலுதிர்த்தி சுரங்களுக்கு துளசி சாற்றி லாவது சன்னி சுரமாயிருந்தால் முலைப்பாலில் மூன்று நாள் கொடுக்கவும். ஜலதோஷமா யிருந்தால் வெற்றிலை யில் கொடுத்து மென்றுதின்ன தீரும்.

## பஞ்சரத்தின குளிகை

| | | | | |
|---|---|---|---|---|
| இரசம் | விராகனிடை | 1 | சவ்வீரம் விராகனிடை | ½ |
| இரச கர்ப்பூரம் | .... | 1 | சுத்திசெய்த வாளம் | 2 |
| சாதிலிங்கம் | .... | 1 | | |

இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டரைத்து திரண்டு வருகிற பதத்தில் கொத்துமல்லி பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பாலிலாவது வென்னீரிலாவது தேனி லாவது இரண்டு மாத்திரை மூன்று நாளைக்கு கொடுக்கவும். சன்னி சுரம், மார்தம், வீக்கம், சுழிகணை, கபம், வாதம், வலிகள் தீரும். கடும் பத்தியம்.

## மாத்திரை வகைகள் முற்றிற்று.

# குழந்தைகள் ஔஷதம்

## மாந்தரோகம் வருகிற விதம்

எருமைப்பால், நெய், கதலிதேங்காய், இளநீர், கடலை, வெல்லம், புளித்தமோர், மாங்கிஷம், கனிகள், மலைத் துவரை, உளுந்து, மொச்சை, புளியங்கொட்டை, உளுவை, வாளைமீன், கெண்டை, கிழங்கு வகைகள் முதலியவை தாயார் அருந்தி அம்முலைப்பாலை சேய்க்கு ஊட்டினதினல் மாந்தரோகம் வந்ததென்றறிக.

## 21. மாந்தரோகம் வகை

1 வாத மாந்தம்
2 பித்த மாந்தம்
3 செறி மாந்தம்
4 சேஷ்ம மாந்தம்
5 விஷ மாந்தம்
6 வாலை மாந்தம்
7 சுர மாந்தம்
8 நீர் மாந்தம்
9 செரியா மாந்தம்
10 கட்டு மாந்தம்
11 பால் மாந்தம்
12 துலையா மாந்தம்
13 எரி மாந்தம்
14 தலை மாந்தம்
15 கண மாந்தம்
16 வலிப்பு மாந்தம்
17 சுழி மாந்தம்
18 மூக்கு மாந்தம்
19 ஜன்னி மாந்தம்
20 ஊத மாந்தம்
21 வீக்க மாந்தம்

ஆக இருபத்தொன்ருக வழங்கிய தென்றறிக.

## மாந்தரோகங்களின் குணம்

குழந்தை கனமாயிருக்கும், பிரண்டையைப்போல் கால் பின்னும், கண்கள் சிவக்கும், உடம்பில் நோய்காட்டும், கையில் தங்காது, அழுகுரல் தாழ்ந்திருக்கும், கண் குழிர்

திருக்கும், வயறு கழியும், வாய் நாரும், கைகால்கள் குளிர் காணும், பால் உண்ணாது, வாந்திபண்ணும், வாய், நாக்கு, உலர்ந்து காணும், மயக்கமுண்டாம், பசியில்லாமல் காம விகாரங் கொண்டவனைப்போல் சோர்ந்து கிடக்கும், சிதமும் மலமுங் கலந்துபோகும், கெட்டபால்போலும், தெளிந்த தண்ணீர்போலும் வயறுகழியும், உள்ளங்கைகால் குளிர்ந்துகாணும், வெதும்பும், கண்சுழலும், தேகம் வியர்க்கும், கண்ணாடியைப்போல் முகம் மினுமினுப்பாயிருக்கும்.

## குழந்தைகளுக்கு ஔஷதங்கள்

### மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு

| | |
|---|---|
| நொச்சி | நுணா |
| பொடுதலை | உத்தாமணி |

இந்நான்கும் சமன்கொண்டிடித்துச் சார் பிழிந்து சற்று அடுப்பில்வைத்து காலாழாக்கு வீதம் மூன்றுநாள் காலையில் கொடுக்கவும், அன்றி மேற்கூறியதைப்போல் நாடோறும் வெவ்வேறு செய்யவும்.

### மாந்தத்துக்கு குழம்பு

| | |
|---|---|
| வெற்றிலைக்காம்பு 11 | உள்ளி இரண்டிடை |
| வசம்பு ஐந்திடை | திப்பிலி ஒருஇடை |

இவைகளை வெதுப்பி அரைத்து குழந்தைகளுக்கு தக்கபடி வெந்நீரிற் கலந்து கொடுக்கவும்.

### மாந்தத்துக்கு குடிநீர்

| | |
|---|---|
| ஓமம் | மிளகு |
| உள்ளி | திப்பிலி |

இவைகளைப் பொடித்து துணியில் மூட்டை கட்டி நாழி நீரில் போட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சிக் கொடுக் கவும்.

## மாந்தத்துக்கு கியாழம்

| | |
|---|---|
| நுணா | உத்தாமணி |
| நொச்சில் | கெச்சைக்காய்வேர் |

இவைகளை வகைக்கு பிடி ஒன்றாக சட்டியில் கருக்கி நாழி நீர்விட்டு அடுப்பேற்றி,

| | |
|---|---|
| ஓமம் | மிளகு |
| வசம்பு | பொடுதலைக்காய் |
| சுக்கு | திப்பிலி |

இவைகளை வகைக்கு ஒரு விராகனிடை கொண்டு நல்லெண்ணெயிற் சிவக்க வறுத்து பொட்டளமாய்க்கட்டி ஷை நீரில் போட்டு காய்ச்சி ஒரு சங்கு கொடுக்கவும்.

## மாந்தத்துக்கு குளிகை

வாய்விளங்கம், சுட்ட ஆமை ஓடு, மிளகு, பொடு தலைக்காய், வசம்பு, திப்பிலி, கழல்பருப்பு இவைகளைச் சமன் கொண்டு பொடுதலைச் சாற்றாலாட்டிப் பட்டாணிப் பிரமாணம் குளிகை செய்யவும்.

## அநுபானம்

ஷை குளிகை ஒன்றைக் கண்டங்கத்திரிக் கியாழத்தி லிட மாந்தமும், உத்தாமணிக் கியாழத்தில் வயிர் பொரு மலும், வாந்தியும், ஓமக்கியாழத்தில் கழிச்சலும், தேனில் வாத சீதளமும், முலைப்பாலில் முக்குமாந்தமும், இஞ்சிச் சாற்றில் மயக்கமும் நீங்கும்.

## உளைமாந்தம், உட்சுரம், எலும்புரிக்கிக்கு மருந்து

புல்லுருவியும், கருப்புக் கட்டியும் எண்ணெயில் அரைத்து சுண்டைக்காயளவு கொடுக்கவும்.

## சுழிகணம், உப்பிசம், கோழைக்கட்டு, இளைப்புக்கு மருந்து

குப்பைமேனிச் சாற்றால் உப்பை அரைத்து வேப் பெண்ணெயில் மத்தித்து இரண்டு காசெடை 3 - நாள் கொடுக்கவும்.

## மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு மருந்து

நல்வேளையிலை, வசம்பு, வள்ளியிலை சமன் கொண்டு இடித்து வெதுப்பிப் பிழிந்து குழந்தைகளுக்குத் தக்கபடி $\frac{1}{4}$-$\frac{1}{2}$-$\frac{3}{4}$-1-சங்குவீதம் கொடுக்கவும்.

## மாந்தம் வயிற்றுவலி செறியாமாந்தத்துக்கு மருந்து

உத்தாமணிச்சாறு ஆழாக்கில் வசம்பு, திரிகடுகு, கோரோசனை இவைகள் வகைக்கு விராகனிடை 2, உத்தா மணிக்கொழுந்து விராகனிடை 4 ஒன்றாய்ச்சேர்த்தரைத்து தக்கபடி கொடுக்கவும்.

## மாந்த வலிப்பு-காக்கை வலிப்புக்கு மருந்து

| | | |
|---|---|---|
| கொடிவேலிவேர்பட்டை | விராகனிடை | 3 |
| சங்கன்வேர்த்தோல் | .... | 3 |
| எருக்கன்வேர்பட்டை | .... | 3 |

இவைகளை வென்னீர்விட்டு நன்றாக அரைத்து கலக்கி வடிகட்டி குங்குமப்பூ ஒரு விராகனிடை போட்டு தக்கபடி கொடுக்கவும்.

## மாந்தவீக்கம் விஷவீக்கம், சுரம், நீர்க்கட்டுக் கியாழம்

| | | | |
|---|---|---|---|
| துளசி விராகனிடை | 5 | வரமுள்ளி விராகனிடை | 5 |
| பூவரசன் பழுப்பு .... | 5 | முருங்கையீர்க்கு .... | 5 |
| சங்கன்வேர்ப்பட்டை .... | 5 | நீர்முள்ளிவேர் .... | 5 |
| சீந்திற்கொடி .... | 5 | சார்வளைவேர் .... | 5 |
| பிரமியிலை .... | 5 | மருள்கிழங்கு .... | 5 |
| தூதுவேளை .... | 5 | சிறுகுறிஞ்சான்வேர் .... | 5 |
| சத்திசாரணைவேர் .... | 5 | கருஞ்சீரகம் .... | 5 |
| சுக்கு .... | 5 | | |

இவைகளை ஒருபடி ஜலம் விட்டு ஆழாக்கு ஜலமாகக் காய்ச்சி 3-நாள் ஆறுவேளை கொடுக்கலாம்.

## உப்பல் மாந்தத்துக்கு மருந்து

குப்பைமேனியும் உப்பும் கசக்கி சார்பிழிந்து இரண்டு காசெடை வீதம் 3-நாள் கொடுக்கவும்.

## அமுர்தாதிக் குளிகை

| | |
|---|---|
| அதிமதுரம் | வெட்டிவேர் |
| சண்பகப்பூ | கோஷ்டம் |
| ஏலம் | மாசிப்பச்சை |
| கோரோசனை | விலாமிச்சம்வேர் |
| சாத்திரபேதி | |

இவைகளைச் சமன்கொண்டு ஆதண்டச்சாறு விட்டு ஒரு ஜாமமாட்டி குன்றியளவு உருண்டைசெய்து ஒரு உருண்டையை முலைப்பாலில் தாக்க நீர்க்கண்மாந்தம் 8, குடற்படுவன், நீர்ப்பாடு, கர்ப்பப்பாடு, நாவரட்சி, சுரம், சூலை, எரிவு, வெப்புதோஷம் முதலியவை நீங்கும்.

## முக்கல் வயிற்றுக்கடுப்புக்கு

| | |
|---|---|
| பருத்திப்பிஞ்சு | விடையம் |
| ஜாதிக்காய் | அரத்தை |
| கிராம்பு | ஓமம் |
| இலந்தைவித்து | |

இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் கன்னிடையன் தயிரில் கலந்து கொடுக்கவும்.

## சீதக்கடுப்புக்கு மருந்து

பருத்திவித்து, ஜாதிக்காய், நன்னாரிவேர், வட்டத் திப்பிலி, சீரகம், கிராம்பு இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச் சூரணித்துச் சிறுபுள்ளடிச் சாற்றிலாட்டி பட்டாணியளவு கொடுக்கவும்.

## அதிமதுர மாத்திரை

| | |
|---|---|
| மதுரம் | மாதளம்பூ |
| விடையம் | சீரகம் |
| ஜாதிக்காய் | |

இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச் சூரணித்து மாதளம்பழச்சார் அல்லது புளியாரைச் சாற்றில் ஒரு ஜாமமாட்டி தூதளங்காய் பிரமாணம் குளிகைசெய்து கொடுக்க வெப்புகழிச்சல் தீரும்.

## அமிர்த சஞ்சீவி குளிகை

| | |
|---|---|
| சாத்திரபேதி | சந்தனம் |
| கோஷ்டம் | கடுகு |
| ஏலம் | ரோகணி |
| இலவங்கம் | இலுப்பைப்பூ |
| நன்னாரி | மதுரம் |
| விலாமிச்சு | கோரைக்கிழங்கு |

| | |
|---|---|
| வெட்டிவேர் | முந்திரிகை |
| திப்பிலி | பேரீச்சு |

இவைகளைச் சமன்கொண்டு கருப்பஞ்சாற்றிலாட்டிக் கடலைப்பிரமாணம் குளிகைசெய்து முலைப்பால் வெந்நீரில் கொடுக்க அஷ்டகணங்கள் சுரம் தாகம் முதலியவைகள் நீங்கும்.

## பேதிக்கு அமிர்த சஞ்சீவி லிங்கக்குழம்பு

| | | | |
|---|---|---|---|
| ஜாதிலிங்கம் விராகனிடை | 2 | வாளம் விராகனிடை | 6 |
| வெண்காரம் .... | 2 | ஆமணக்குவித்து .... | 4 |

இவைகளை நன்றாயாட்டி குன்றியளவு உருண்டை செய்து குளிர்ந்த நீரில் தாக்க பேதியாகும்; வெந்நீரில் கொடுக்க பேதிகட்டும்; வாதம், குன்மம், கரப்பான் முதலியவைகள் போகும்; அன்றி குழந்தைகளுக்குச் சொல்லும் ஔஷதங்களை யெல்லாம் இந்நூலிற் கூறியவாறு போல் சுத்திசெய்துக் கொள்ளவும்.

## பூபதி மாத்திரை

| | |
|---|---|
| சந்தனம் | கோரைக்கிழங்கு |
| நன்னாரி | ஒரிலைத்தாமரை |
| புளியன்வித்து ஒடு | நாயுருவி |
| சிறுகீரை | வல்லாரை |
| ஜாதிக்காய் | செண்பகம் |
| ஜாதிபத்திரி | கல்நார் |
| திப்பிலி | நற்சீரகம் |
| இருவாட்சி | கருஞ்சீரகம் |
| ஏலம் | இலவங்கப்பட்டை |
| உருத்திராட்சம் | பொன்னாங்கண்ணிவேர் |
| கோரோசனை | குப்பைமேனிவேர் |
| சாத்திரபேதி | |

இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து வல்லாரைச் சாறும், காணிச்சாறும் சமன்கொண்டு ஷை சரக்குகளை நன்றாயாட்டி தேத்தான்வித்தளவு குளிகைசெய்து தக்க அநுபானங்களாலீய அட்டகணம் மாந்தம் பொருமல் முதலியவை நீங்கும்.

## பேதிபூபதி மாத்திரை

இரசம், சுக்கு, வெண்காரம், கெந்தி வகைக்கு பலம் ¼, நேர்வாளம் பலம் 1 இவைகளைக் குளிர்ந்த நீரிலாட்டிப் பனிப்பயரளவு குளிகைசெய்து குளிர்ந்த நீரில் தாக்க பேதியாகும், வெந்நீரில் கொடுக்க பேதிகட்டும், ஊது மாந்தம், பொருமல், வாதம் முதலியவை போகும்.

## ஏலாதி மாத்திரை

ஏலம்
மாசிக்காய்
திப்பிலி
கோரோசனை
கோஷ்டம்
மாஞ்சில்
சீரகம்
கருஞ்சீரகம்
அக்கிராகாரம்

இவைகள் வகைக்கு பலம்-½ பொன்வறுப்பாக்கிச் சூரணித்து முலைப்பாலால் 2 ஜாமமறைத்து கடலைப் பிரமாணம் குளிகைசெய்து முலைப்பாலில் கொடுக்க கணக்காய்ச்சல் நீங்கும்.

## கட்டுவாதி மாத்திரை

ஜாதிக்காய்
ஜாதிபத்திரி
இலவங்கம்
ஏலம்
மதுரம்
விடபம்
புளியாரை
காட்டாத்தி
அபினி
கஞ்சா

| | |
|---|---|
| குராசனிஓமம் | சிறுநாகப்பூ |
| கோரைக்கிழங்கு | மாதளம்பிஞ்சி |
| வெந்தயம் | வாழைப்பூ |
| சீரகம் | |

இவைகள் வகைக்கு பலம்-¼ கொண்டிடித்துச் சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து வாழைப்பூச் சாற்றிலாவது மாதளம்பழச் சாற்றிலாவது ஆட்டி மிளகுப் பிரமாணம் குளிகைசெய்து சர்க்கரையில் தாக்க பேதிகட்டும்.

## கற்பூராதி மாத்திரை

| | |
|---|---|
| பச்சைகற்பூரம் | லவுங்கம் |
| கெந்தி | ஜாதிக்காய் |
| இந்துப்பு | ஜாதிபத்திரி |

இவைகளை வகைக்கு கழஞ்சி 1 நிம்பழச்சாற்றிலாட்டி உளுந்தளவு குளிகைசெய்து இஞ்சிச்சுரசம், சர்க்கரை, சுக்கில் குளிகை ஒன்றைக்கொடுக்க மாங்கிஷ சுரம் முதலாகிய சகல சுரங்களும் விட்டோடிப்போம்.

## கோடாசூழி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| கோரோசனை | விராகனிடை 2 | நேர்வாளம் | விராகனிடை 1 |
| கடுகுரோகணி | .... 1 | | |

இவைகளை முலைப்பாலாலாட்டிப் பயறளவு குளிகை செய்து குளிகை ஒன்றை இஞ்சிச்சாற்றிலிட வாதசுரமும், முலைப்பாலில் பித்தசுரமும், ஆடாதோடை கண்டங்கத்திரியாழத்திலிட சிலேற்பன சுரமும், தூதுவளைப்பிட்டவியலில் சன்னிசுரமும் நீங்கும்.

## கோரோசனை மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| மாசிக்காய் | விராகனிடை 2 | கோஷ்டம் | ,, 2 |
| திப்பிலி | .... 2 | கருஞ்சீரகம் | ,, 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரத்தை | விராகனிடை | 2 | கோரோசனை | .... | 2 |
| அக்கிராகாரம் | .... | 2 | | | |

இவைகளை முலைப்பாலால் ஒரு ஜாமமாட்டிப் பயறளவு குளிகைசெய்து பாவையர்பாலால் குளிகை ஒன்றை தீட்ட மாந்தகணம், ஜன்னி, பொருமல், சீதளம் முதலியவை போம்.

## சஞ்சீவி குளிகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாபி | கழஞ்சி | 1 | சுக்கு | கழஞ்சி | 1 |
| கருநாபி | .... | 1 | தான்றிக்காய் | .... | 1 |
| வாலரசம் | .... | 1 | மிளகு | .... | 1 |
| கெந்தி | .... | 1 | திப்பிலி | .... | 1 |
| வெண்காரம் | .... | 1 | வாளம் | .... | 5 |

இவைகளைக் கையாந்த கரைச்சாற்றால் நாளொன்றுக்கு ஒரு ஜாமமாக 7-நாள் ஆட்டி குன்றியளவு உருண்டை செய்து குளிகை ஒன்றை ஜாதிக்காய் சூரணத்தில் தாக்க மூலவாய்வும், சிறுநீரில் பற்பல வாய்வுகளும், எலுமிச்சம் பழச்சாற்றில் விஷங்களும், நொச்சிச்சாற்றில் மூலம், வலி குன்மம், முருங்கப்பட்டைச்சாற்றில் சூலைரோகமும், வெண் மரிப்பாலில் க்ஷயரோகங்களும், மருதான்றிச்சாற்றில் ஐவகைப் பிரமியமும், விளக்கெண்ணெயில் மலச்சிக்கலும், சீந்தில் சாற்றிலிட எரிகுன்மமும் நீங்கும்.

## விரோசன சண்பகப்பூ மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | பலம் | $\frac{1}{4}$ | கடுகுரோகணி | பலம் | $\frac{1}{4}$ |
| இலவங்கம் | .... | $\frac{1}{4}$ | சண்பகப்பூ | .... | 1 |
| கோஷ்டம் | .... | $\frac{1}{4}$ | வாளம் | .... | $\frac{1}{2}$ |

இவைகளை வெந்நீர்விட்டரைத்து மிளகளவு குளிகை செய்து தேன், சுக்குக் கியாழத்திலிட பேதியாகும். வசம்பைச் சுட்டுக்கொடுக்க பேதிகட்டும்.

## கஸ்தூரி மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஸ்தூரி | விராகனிடை | 1 | குங்குமப்பூ | விராகனிடை | 2 |
| கோரோசனை | .... | 3 | | | |

இவைகளை முலைப்பாலாலாட்டி குன்றியெடை குளிகை செய்து தக்க அநுபானங்களாலிட தோஷசன்னி, மாந்த சன்னி, பித்தசுரம், வாந்தி முதலியவை நீங்கும்.

## குரு மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சண்பகப்பூ | கழஞ்சி | 1 | சாத்திரபேதி | கழஞ்சி | 1 |
| விலாமிச்சம்வேர் | .... | 1 | மதுரம் | .... | 1 |
| கோஷ்டம் | .... | 1 | வெட்டிவேர் | .... | 1 |
| ஏலம் | .... | 1 | மாசிப்பச்சை | .... | 1 |
| கோரோசனை | .... | 1 | | | |

இவைகளை வெட்டிவேர் கியாழத்தில் ஒரு ஜாமமாட்டி குன்றியளவு உருண்டைசெய்து மாத்திரை ஒன்றை முலைப் பாலிலாவது இழைத்துக் கொடுக்க மாந்தம் முதலியவை கள் நீங்கும்.

## பூர மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுத்திசெய்த பூரம் | பலம் | ½ | வசம்பு | பலம் | ¼ |
| இலவங்கம் | .... | ¼ | மாசி | .... | ¼ |
| ஏலம் | .... | ¼ | அதிவிடையம் | .... | ¼ |

இவைகளை மாசிப்பத்திரிவேரின் சாற்றால் ஒரு ஜாமமும், விஷ்ணுகரந்தைச் சாற்றால் ஒரு ஜாமமு மாட்டி கொத்துமல்லியளவு குளிகை செய்து, குளிகை ஒன்றை தேன், முலைப்பாலில் தாக்க மாந்த ரோகங்கள் யாவும் நீங்கும்.

## வில்வாதி மாத்திரை

| | |
|---|---|
| பச்சைகற்பூரம் | வால்மிளகு |
| இலவங்கம் | சிறுநாகப்பூ |

| | |
|---|---|
| சீரகம் | சடாமாஞ்சி |
| கடுகுரோகணி | சுக்கு |
| ஏலம் | ஆலிப்பருப்பு |

இவைகளைச் சமன்கொண்டு பொற்றலையின் சாற்றால் நாலு ஜாமமாட்டி ஒன்பதாநாள் மிளகளவு குளிகைசெய்து தேன் முலைப்பாலில் தாக்க நாட்பட்ட மாந்தசுரம் முதலியவை போம்.

## இரசச்செந்தூர மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரசச்செந்தூரம் | பலம் | $\frac{1}{4}$ | சுக்கு | விராகனிடை | $\frac{1}{4}$ |
| கடுக்காய் | .... | $\frac{1}{4}$ | மிளகு | .... | $\frac{1}{4}$ |
| தான்றிக்காய் | .... | $\frac{1}{4}$ | திப்பிலி | .... | $\frac{1}{4}$ |
| நெல்லிக்காய் | .... | $\frac{1}{4}$ | குங்குமப்பூ | .... | $\frac{1}{4}$ |
| ஏலம் | .... | $\frac{1}{4}$ | கஸ்தூரி | .... | $\frac{1}{4}$ |
| லவுங்கம் | விராகனிடை | 1 | கோரோசனை | .... | $\frac{1}{4}$ |

இவைகளைக் கருநொச்சிச்சாறுவிட்டு ஒரு ஜாமமாட்டி சிறுபயறளவு குளிகைசெய்து துளசிச்சாற்றிலிட வயிறுப் பல், மாந்தம் முதலியவை நீங்கும்.

## பாலசஞ்சீவி மாத்திரை

| | | | | |
|---|---|---|---|---|
| வெண்காரம் | கழஞ்சி | 3 | கொள்ளுக்காய் | 3 |
| துத்தம் | .... | 3 | வேலை | 3 |
| கோரோசனை | .... | 3 | கடுகுரோகணி | 3 |

இவைகளை அகத்தியிலைச் சாற்றால் ஒரு ஜாமமாட்டி சிறுபயறளவு உருண்டைசெய்து ஜாபத்திரி சூரணத்திலும், பனைவெல்லத்திலும், வெந்நீரிலும் கொள்ள கணமாந்தம், வயிற்றுளைவு, சன்னிசுரம் முதலியவை நீங்கும்.

## இராமபாணக் குளிகை

| | |
|---|---|
| மஞ்சள் | சுக்கு |
| ஜாதிக்காய் | மிளகு |

திப்பிலி
இலவங்கம்
கடுகுரோகணி
மரமஞ்சள்
நாபி

இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நாலுஜாமம் விடாமலாட்டிப் பயறளவு குளிகைசெய்து தேன் முலைப்பாலில்கொள்ள சகல சுரங்களும், சன்னி முதலியதும் நீங்கும்.

## ஏலாதி மாத்திரை

ஏலம்
மாசிக்காய்
திப்பிலி
கோரோசனை
கோஷ்டம்
மாஞ்சில்
சீரகம்
கருஞ்சீரகம்
அக்கிராகாரம்

இவைகள் வகைக்கு பலம் ½ பொன்வறுப்பாக்கிச் சூரணித்து முலைப்பாலில் கொடுக்க கணக்காய்ச்சல் நீங்கும்.

## இருமலுக்குச் சூரணம்

கண்டங்கத்திரிவிரை, அமுக்கரா, திப்பிலி இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து உலர்த்தி சீனி சமன்சேர்த்து திரிகடிப் பிரமாணம் 10-நாள் இருவேளைகொள்ள வாந்திசுரம், இருமல், ஈளை முதலியதும் நீங்கும்.

## பேதி மாத்திரைகள்

(1) சுத்திசெய்த வாளம் பலம் 1, சுக்குத்தூள் பலம் 1, லிங்கம் விராகனிடை-1, இவைகளைக் கல்வத்திலிட்டு ரொட்டியால் 3 ஜாமமாட்டி சிறுசுண்டக்காயளவு குளிகை செய்யவும். அநுபானம்; சர்க்கரை.

(2) சுத்திசெய்த வாளம் பலம் 5, கடுக்காய்த்தோல், பன்னீர்ப்பூ, இந்துப்பூ, ரோகணி, சுக்கு, வெடியுப்பு வகைக்கு பலம் 2, கல்வத்திலிட்டு நிலாவாகைக் கியாழத்தில் 4 ஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவு குளிகை செய்யவும். அநுபானம்: நிலாவாகைக் கியாழம்.

(3) மிளகு, சுத்திசெய்த வாளம் சமன்கொண்டு சோற்றுப்பு இரட்டி சேர்த்து மலைத்தேனலாட்டிப் புளியங்கொட்டையளவு குளிகை செய்யவும். அநுபானம்: சீனி.

(4) முத்துக்கொட்டை பலம்-1, சுக்கு பலம்-½, மிளகு பலம்-1, வெடியுப்பு பலம்-¼, சுத்திசெய்த வாளம் பலம்-3, கல்வத்திலிட்டு மலைத்தேனலாட்டி பட்டாணி பிரமாணம் குளிகை செய்யவும். அநுபானம்: சீனி.

(5) மிளகு, சுக்கு, திப்பிலி, சீரகம், ஓமம், ரோகணி, கூர்மத்தோடு, கோஷ்டம், வகைக்குப் பலம்-1, முத்துக்கொட்டை பலம்-½, சுத்திசெய்த வாளம் பலம்-5, இவைகளை சம்பழச்சாற்றலாட்டி, பட்டாணிவீதம் குளிகை செய்யவும். அநுபானம்: சீரகச் சூரணம்.

(6) சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி வகைக்குப் பலம் 1, வாளம் பலம் 5, லிங்கம் விராகனிடை 1, பூரம் விராகனிடை ½, இவைகளைக் கல்வத்திலிட்டு சம்பழச்சாற்றால் 8 ஜாமமரைத்து சிறிய பட்டாணிவீதம் குளிகை செய்யவும். அநுபானம்: சீனி.

(7) வாளம், இரசபற்பம், இரசச்செந்தூரம், பூரம், வகைக்குப் பலம்-1, மிளகு பலம்-2, இவைகளை நிம்பழச்சாற்றால் 2-ஜாமமாட்டி சிறிய பட்டாணியளவு குளிகை செய்யவும். அனுபானம்: மிளகு சூரணம்.

குழந்தைகள் ஔஷதம் முற்றிற்று.

# எண்ணெய் வகைகள்

## ஜாதிக்காய் எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜாதிக்காய் | விராகனிடை | 2 | செவ்வியம் | விராகனிடை | 2 |
| ஜாதிபத்திரி | .... | 2 | போரத்தை | .... | 2 |
| ஏலம் | .... | 2 | பொற்கடுக்காய் | .... | 2 |
| கோஷ்டம் | .... | 2 | தான்றிக்காய் | .... | 2 |
| அதிவிடையம் | .... | 2 | மாசிக்காய் | .... | 2 |
| குங்குமப்பூ | .... | 2 | நற்சீரகம் | .... | 2 |
| அதிமதுரம் | .... | 2 | வால்மிளகு | .... | 2 |
| கண்டுபாரங்கி | .... | 2 | குராசானி ஓமம் | .... | 2 |
| சித்திரமூலம் | .... | 2 | சதகுப்பி | .... | 2 |
| சுக்கு | .... | 2 | வசம்பு | .... | 6 |
| ஓமம் | .... | 5 | | | |

மேற்கண்ட சரக்குகளை சூரணித்து,

| | |
|---|---|
| ஈயத்தண்டு | நாவற்கொழுந்து |
| பழம்பாசி | விடத்தாரி |
| இலைக்கொழுந்து | கருவேலம் |
| நுணா | சங்கிலை |
| கெச்சக்காயிலை | கொட்டைகாந்தை |
| கிலுகிலுப்பை | சடைச்சி |
| குதிரைவாலி | சிறுபுள்ளடி |
| கண்டங்கத்திரி | ஜோகி |
| செருப்படை | துளசி |
| கோழிஅவரை | தும்பை |
| ஆடாதோடை | பொடுதலை |
| வல்லாரை | வேளை |
| தவசிமுருங்கை | வரப்பூலா |

இவைகளை வகைக்கு இலைச்சாறு படி $\frac{1}{8}$, விளக்கெண்ணெய் படி-1, ஒன்றாய்க் கலந்து ஸ்தன்னியப் பால் $\frac{1}{4}$-ஆழாக்கு சேர்த்து, திருநீற்றுப்பத்திரிவேரும், கரிவேப்பிலை ஈர்க்கு, நறுக்கிக் கூடப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி உச்சிகரண்டி வீதம் கொடுக்க கணம், மாந்தம், நீர்மேகம், கிரந்தி முதலியவை நீங்கும்.

## கொதிப்புகணத்திற்கு எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிற்றாமணக்கு | படி | 1 | ஈருள்ளிச்சாறு | படி | $\frac{1}{4}$ |
| சம்பழச்சாறு | .... | $\frac{1}{4}$ | கருஞ்சீரகம் | பலம் | $\frac{1}{4}$ |
| இலந்தைச்சாறு | .... | $\frac{1}{4}$ | கற்றாழைச்சோறு | .... | 1 |

கருஞ்சீரகத்தைப் பொடித்துப்போட்டு ஏழுதரம் சுத்திசெய்த கற்றாழைச்சோற்றை மேற்கண்ட பலம்விட்டு எல்லாம் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கற்றாழைச் சிவந்த சமயத்தில் காய்ச்சி இறக்கி உச்சிக்கரண்டிவீதம் அந்தி சந்தி கொடுக்க, கொதிப்புகணம் 18, கணச்சூடு, அத்தி சுரம், அஸ்திவெட்டை, மேகவகை, பித்தவெட்டை முதலியவை போகும். இவ்வெண்ணெய் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் உதவும்.

## மாந்தப்பொருமலுக்கு எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விளக்கெண்ணெய் | படி | $\frac{1}{2}$ | துளசிச் சாறு | படி | $\frac{1}{4}$ |
| பேய்மிரட்டிச்சாறு | .... | $\frac{1}{4}$ | தூத்துச்சாறு | .... | $\frac{1}{4}$ |
| பொடுதலைச்சாறு | .... | $\frac{1}{4}$ | அகத்தியிலை | .... | $\frac{1}{4}$ |
| வேலிச்சாறு | .... | $\frac{1}{4}$ | பச்சைமஞ்சள் | .... | வீசம் |

இவைகளையெல்லாம் சேர்த்து கலக்கி ஓமம், சுட்ட ஆமையோடு, உள்ளி, வசம்பு, வகைக்குப் பலம்-$\frac{1}{4}$ இடித்து ஷை எண்ணெயில் ஒருகாசெடை எடுத்து வெண்காயம்

பணவெடை பொறித்துப்போட்டு, பெருங்காயம் பண வெடை இழைத்து கலந்து கொடுக்க, முதல் நாள் பேதி அதிகமாகக் கிளறி மறுநாள் முதற்கொண்டு பொருமல், சத்திமாந்தம் முதலியவை நீங்கும்.

## எரிகணத்திற்கு எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| பழம்பாசிச்சாறு படி | ½ | குமரிவேர் படி காலேரிக்கா | |
| தென்னங்குரும்பைச்சாறு | ¼ | நுணாசாறு .... | .... |
| உள்ளிச்சாறுபடிகாலேரிக்கா | | எள்ளெண்ணெய் படி | 1 |

இவைகளை ஒன்றுபடுத்தி ஏலம், இலவங்கப்பட்டை, கோஷ்டம், நற்சீரகம், சந்தனம், மதுரம் வகைக்கு கழஞ்சி ½, பொடித்துப்போட்டு எண்ணெயைக் கடுகு பதத் திற் காய்ச்சி இறக்கி வடிகட்டி காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்.

## மூக்குக்கணத்திற்கு எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| எள்ளெண்ணெய் நாழி | 1 | குமரிச்சாறு படி | ¼ |
| குழந்தைப்பால் படி | ¼ | கண்ணிச்சாறு .... | ¼ |
| நிம்பழச்சாறு .... | ¼ | வில்வம் பலம் | 1 |
| விஷ்ணுகாந்தி பலம் | 1 | விலாமிச்சு .... | 1 |
| கோரைக்கிழங்கு .... | 1 | ஓரிலைத்தாமரை .... | 1 |
| துளசிவித்து .... | 1 | முருங்கைவித்து .... | 1 |
| கோஷ்டம் .... | 1 | கோங்கு பிசின் .... | 1 |
| மதுரம் .... | 1 | ஆவாரை பிசின் .... | 1 |
| தாளிசம் .... | 1 | அக்கிராகாரம் .... | 1 |

மேற்சொன்ன சாறு வகைகளை பின்னிட்டு ஒன்றாய்க் கலக்கி மற்ற வகைகளை வறுத்துப் பொடித்து ஷை எண்ணெ யிற்போட்டுக் கடுகுபதமாகக் காய்ச்சி காசெடை உள்ளுக் குக் கொடுத்து இண்டந்தண்டை ஊதி நறுக்கி சீரகத்தைப்

பொடித்துப்போட்டு தண்ணீர் படி ¼ வார்த்து எட்டி லொன்றாகக் காய்ச்சி இயாழமாய் வார்க்கவும்.

## உலர்ந்த தேகத்திற்கும் பதினெட்டு கணம் வெட்டை சுரத்திற்கும் எண்ணெய்

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் படி 1 | கற்றாழைச்சோறு தேங்காயளவு |

இவைகளை ஒன்றாய்க் கலந்து வெந்தயம் ஒருகாசெடை பொடித்துப்போட்டு அதனுடன் ஈருள்ளி பலம்-1 அறிந்து சேர்த்து அடுப்பேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி ஒரு உச்சிக் கரண்டி வீதம் கொடுக்கவும்.

## தோஷம் 9, மாந்தம் 9, 18 கணத்திற்கும் எண்ணெய்

| | |
|---|---|
| ஈயத்தண்டு | சத்திசாரணை |
| தூதுவளை | பூலா |
| சங்கங்குப்பி | நரிபயற்றன் |
| உத்தாமணி | பிரமி |
| பூவரசு | வேளை |
| குப்பைமேனி | கற்றாழை |
| ஆடாதோடை | |

இவைகளின் வேர் சமன்கொண்டு இடித்துப் பிழிந்த சாறு படி-1, விளக்கெண்ணெய் படி-2 ஒன்றுபடுத்தி,

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | கோரோசனை |
| ஓமம் | சண்பகம் |
| பூண்டு | வசம்பு |
| ஜாதிக்காய் | தான்றிக்காய் |

இவைகளை வகைக்குப் பலம் ¼ பொடித்து ஷை எண்ணெயிற் கலக்கி பதமாய்க் காய்ச்சி வடித்திறக்கி உச்சிக் கரண்டி வீதம் கொடுக்கவும்.

## மாந்தகோடரி எண்ணெய்

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளை | மணித்தக்காளி |
| நல்வேளை | கழற்சி |
| துளசி | நீலி |

இவைகளை வகைக்கு இலைச்சாறு படி அரைக்கால், ஆவின் நெய் படி ½ ஒன்று சேர்த்து கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை 1, பொடித்துப்போட்டு கடுகுபதமாகக் காய்ச்சி வடிசெய்து அந்திசந்தி காசெடை உள்ளுக்குத்தாக்க, சகல மாந்த வகைகளும் நீங்கி நல்ல இரத்தம் பரவி குளிர்ச்சி தந்து குழந்தை தேகம் புஷ்டியுண்டாம்.

## தேங்காய் எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| ஏலம் | விராகனிடை 1 | கருஞ்சீரகம் | விராகனிடை 1 |
| கஸ்தூரி மஞ்சள் | .... 1 | கடுக்காய்த்தோல் | .... 1 |
| கார்போக அரிசி | .... 1 | நீரடிமுத்து | .... 1 |

இவைகளை ஊமத்தைக்காயிற்குள்வைத்து சீலை செய்து காய்மாத்திரம் வேகும்பதமாய்ப் புடமிட்டுப் பின் காய்க்கு உள்ளிருக்கும் சரக்குகளை காயவைத்து இடித்துச் சூரணித்து தேங்காயெண்ணெயால் நன்காட்டி, ஆழாக்குத் தேங்காயெண்ணெயில் கலக்கி மூன்றுநாள் சூரிய புடம் வைத்து எடுத்து சொரி, சிரங்கு, கரப்பான் இவைகளுக்கு மேற்பூச நீங்கும்.

## மாந்தத்திற்கு நல்லெண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| எள்ளெண்ணெய் | படி ½ | சீரகம் | பலம் 1 |
| மருட்கிழங்கு | பலம் 1 | ரோகணி | .... 1 |
| உள்ளி | .... 1 | விளங்கம் | .... 1 |

இவைகளை ஆவின்பாலாலாட்டி ஷை எண்ணெயிற் கரைத்து நிம்பழச்சாறு படி ¼ சேர்த்து பதமாய்க் காய்ச்சி வடிசெய்து இரண்டு காசெடை உள்ளுக்குக் கொடுக்க மாந்தம் கணம் முதலிய நீங்கும்.

## சூரியபுட நல்லெண்ணெய்

| | |
|---|---|
| சிறுபுள்ளடியிலை | அவுரி |
| கழல்கொழுந்து | பொடுதலை |

வகைக்குப் பிடி-1, நைய நறுக்கி ஆழாக்கு நல்லெண்ணெயிற்போட்டு சூரியபுடம்வைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலும்பூச கணமாந்தம் போம்.

## சன்னிசுரத்திற்கு வேப்பெண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| வேப்பெண்ணெய் படி | ½ | பாவட்டைச்சார் படி | ¾ |
| சங்கிலைச்சார் .... | ¾ | முசுறுமுட்டை .... | ¾ |

ஷை எண்ணெயிற் சேர்த்து,

| | | | |
|---|---|---|---|
| சுக்கு விராகனிடை | 1 | மிளகு விராகனிடை | 1 |
| திப்பிலி .... | 1 | நற்சீரகம் .... | 1 |
| வசம்பு .... | 1 | கருஞ்சீரகம் .... | 1 |
| பூண்டு .... | 1 | கஸ்தூரிமஞ்சள் .... | 1 |

மேற்கண்ட வகைகளை பொடித்துப்போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடிசெய்து துட்டெடை கொடுக்க சன்னி, சுரம், கபம், மாந்தம் முதலியதும் நீங்கும்.

## 18 கரப்பானுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| பூவரசு | கண்டங்கத்திரி |
| செங்கத்தாரி | நிலாவாரை |

இவைகளை வகைக்கு விராகனிடை 10 நறுக்கிக் கியாழமிட்டு,

மிளகு
சதகுப்பி
வசம்பு
வலம்புரிக்காய்
வெள்ளுள்ளி
பரங்கிப்பட்டை
கார்போகஅரிசி
கடுகு
சீரகம்

இவைகளை வகைக்குக் கழஞ்சி 2 கொண்டு சூரணித்து முலைப்பாலாலாட்டி ஷை கியாழத்தில் கறைத்து வேறு ஸ்தனத்தின்பால் படி ½ விட்டு விளக்கெண்ணெய் படி சேர்த்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடிசெய்து உச்சிக் கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்து மேலும்பூச கரப்பான் 18, மாந்தம், கணம் 18-ம் போகும்.

## மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பை எண்ணெய்

விளக்கெண்ணெய் படி 1
நிலக்கடம்பையிலை
சங்கிலை
சங்கங்குப்பி
சிறுசின்னி
நுணா
குமரி
கோழிஅவரை
வெண்காயம்

இவைகளின் சாறு வகைக்கு படி ⅛, கழுதை விட்டைப்பால், புங்கம்வேர், சீவின்பால் வகைக்குப் படி ⅛ சேர்த்து பச்சைசெங்கத்தாரிப்பட்டை, சித்திர மூலவேர்ப் பட்டை வகைக்குப் பலம் ¼, ஆவின்பாலிலறைத்து கூடப் போட்டு மஞ்சிட்டிவேர், பரங்கிச்சக்கை, கார்போகஅரிசி, வெட்பாலையரிசி வகைக்குப் பலம் ½ சூரணித்து ஷை எண்ணெயிலொன்று படுத்தி கடுகுபதத்தில் காய்ச்சியிறக்கி வடிகட்டி ஜாதிலிங்கம் விராகனிடை 1 ஆர்க்கப்பொடித்துப் போட்டு உச்சிக்கரண்டி ஒன்றுவீதம் 7 நாள் சாப்பிட மேகப்படை, மேகத்தடிப்பு, மேகச்சொரி, சிரங்கு, மேக

வாய்வு, சூதகவாய்வு, கட்டி, புண், கிரந்தி, நறுக்கிரந்தி முதலியவை நீங்கும். பத்தியம்: இறைச்சி, கத்திரிப்பிஞ்சி, முருங்கைப்பிஞ்சி, வண்டக்காய், அவரை, துவரை, ஒலே வாளைக்கருவாடு முதலியவை ஆகும். சுட்ட புளி, வறுத்த வுப்பு கூட்டவும். நெய் தாளிதத்துக்காம்.

## மேகத்திறுலிளைத்தவர்களுக்கு நல்லெண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லெண்ணெய் | படி | $\frac{1}{2}$ | தேங்காய்ப்பால் | படி | $\frac{1}{2}$ |
| பொடுதலேச்சாறு | .... | $\frac{1}{2}$ | வெந்தியம் | பலம் | $2\frac{1}{2}$ |

ஊறவைத்து ஷை பாலில் விட்டறைத்து பனவெட்டு பலம் $2\frac{1}{2}$ சேர்த்து கறைத்து ஷை எண்ணெயுடன் கலந்து காய்ச்சி பதத்திலிறக்கி கடுகுடன் வைத்துக்கொண்டு அந்தி சந்தி பாக்களவு கடுகும் தின்று உச்சிக்கரண்டி யளவு எண்ணெயும் சாப்பிட்டுவர மேகச்சூடு, மேகவாய்வு, சொரி, கைகாலசதி முதலியவை நீங்கும். பத்தியம்: புளி, புகை, புலால் நீக்கி நெய் தாளிதத்திற் சேர்க்கவும்; மிளகாய்க்குப் பதில் மிளகும், புளிக்கு பதில் எலுமிச்சம்பழமும் சேர்க்கலாம்; மறுபத்தியமான பிறகு ஸ்நானஞ் செய்யவும்.

## குளிர்ச்சிக்கு எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈரவெண்காயச்சாறு | படி | $\frac{1}{2}$ | கற்றாழைச்சோறு | படி | $\frac{1}{2}$ |
| ஒரிலேத்தாமரைச்சாறு | .... | $\frac{1}{2}$ | வெந்தயம் | .... | $\frac{1}{2}$ |
| எலுமிச்சம்சாறு | .... | $\frac{1}{2}$ | | | |

இவைகளை விளக்கெண்ணெய் படி 1-ல் அறைத்து கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து கரண்டியளவு சாப்பிட ஊஷ்ணகாந்தம், மேகச்சூடு முதலியவை போகும். இச்சாபத்தியம்.

## மண்டைக்குடைச்சலுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| மணித்தக்காளி | கீழாநெல்லி |
| பொன்னாங்கண்ணி | வில்வம் |
| கரிசலாங்கண்ணி | |

இந்த ஐந்து தினுசும் இடித்து ஆழாக்கு சார் பிழிந்து ஆழாக்கு நல்லெண்ணெய் விட்டு கடுகு பதமாய்க் காய்ச்சி இறக்கி 3-நாள் வட்டமாக 5-தலை முழுக்கு முழுக வேண்டியது. ஒவ்வொரு முழுக்கிற்கும் கடுக்கமிளகுநீர் ½-ஆழாக்கு குடிக்க வேண்டியது. பகலில் நித்திரைசெய்ய வேண்டியது. அன்னிய பதார்த்தம் ஆகாது. ஐந்து முழுக்கில் மண்டைக்குடைச்சல் தீரும்.

## காதில் சீழ்வடிதலுக்கு எண்ணெய்

லிங்கம் துட்டிடை, பூரம் துட்டிடை யெடுத்து பொடி செய்து 1-பலம் நல்லெண்ணெய் அடுப்பில் வைத்து காய்ந்த பிறகு ஷை தூளைப்போட்டு நாயுருவிச் சார் காலணாவெடை விட்டு சற்றுநேரம் காய்ச்சி இறக்கிக்கொண்டு பஞ்சியில் தொட்டு காதில் 3-துளி பிழிந்தால் சீழ்வருதல் தீரும்.

## சித்தாதி எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்தாமணக்கு | சேர் | 2 | கடுக்காய் | பலம் | 1 |
| தேங்காய்ப்பால் | .... | 2 | காட்டெருமைப்பால் | .... | ¼ |
| வேலிப்பருத்திச்சாறு | .... | 2 | இந்துப்பு | .... | ¼ |
| காயம் | விராகனிடை | 2 | கருஞ்சீரகம் | .... | ¼ |
| வாளம் | பலம் | 1 | அரிசிதிப்பிலி | .... | ¼ |
| உள்ளி | .... | ¼ | | | |

இவையெல்லாம் எண்ணெயில் தூள் பொடிசெய்து போட்டு காய்ச்சி பதத்தில் வடிக்கவும். இதற்கு தீரும்

வியாதி:- கவுசை பயித்தியம், சூலை, ஆம்பல்கட்டி, கல்லடைப்பு, மலக்கட்டு, பெரும்பாண்டு, நாவடைப்பு, கிரந்தி, சில விஷக்கடி, கண்ணெரிவு, வாய் புண்ணு இவையெல்லாம் தீரும்.

## தினவுக்குப் பூச எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரசம் | விராகனிடை | 1 | கெந்தகம் | விராகனிடை | 1 |

இது இரண்டையும் கல்வத்திலிட்டு துளசிச்சாறு விட்டு அறைத்து அதன்பிறகு எண்ணெயைச் சேர்த்து அறைத்து உடம்பில் பூசத் தீரும்.

## கண்டமாலைக்கு எண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லெண்ணெய் | படி | 2½ | நெல்லிக்காய் கெந்தகம் | பலம் | 2½ |
| பொரிகாரம் | பலம் | ¼ | | | |

தொடிவேலிவேர் இடித்து தேங்காயளவு எடுத்துக் கொண்டு பொரிகாரத்தைப் பொரித்துப்போட்டு இந்த மருந்து மூன்றும் எண்ணெயில் கலந்து சற்றே கொதிக்க வைத்து எடுத்துக்கொண்டு புண்ணிலேயும் பூசி உள்ளுக்கு காசளவு கொடுக்கவும். உப்பு, புளி, புகையிலை தள்ளி 45 நாளைக்கு பத்தியமாய் இருக்க வேண்டும். கண்டமாலைக்கு வெகு சஞ்சீவி.

## அறக்கெண்ணெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறக்கு | பலம் | 32 | கோரைக்கிழங்கு | பலம் | 2 |
| அமுக்குறுவேர் | .... | 32 | செம்பஞுங்கட்டை | .... | 2 |
| சித்திரமுட்டிவேர் | .... | 32 | நன்ஞரிவேர் | .... | 2 |
| வெருகங்கிழங்கு | .... | 32 | | | |

இந்தவரைக்கும் நாலுமரக்கால் தண்ணீர் விட்டு குருணியாகக் காய்ச்சி வடிகொண்டு தயிருந் தண்ணீர் முக்குறுணி கூடவிட்டு நல்லெண்ணெய் படி 7 விட்டுக் கடை சரக்கு,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்தரத்தை | பலம் | 2 | கடுகுரோகணி | பலம் | 2 |
| வாய்விளங்கம் | .... | 2 | சதகுப்பை | .... | 2 |
| கோஷ்டம் | .... | 2 | அதிமதுரம் | .... | 2 |
| செஞ்சந்தனம் | .... | 2 | விலாமிச்சம்வேர் | .... | 2 |
| மரமஞ்சள் | .... | 2 | | | |

தயிரும் தண்ணீர் வார்த்து சரக்கை அறைத்து எண்ணெயில் கூடப்போட்டு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| குங்குமப்பூ விராகனிடை | 2 | பச்சகற்பூரம் விராகனிடை | 2 |
| கோரோசனம் .... | 2 | | |

ஷை எண்ணெயில் கலந்து முழுகவும். இதற்கு தீரும் வியாதி:- நாலாமுறை மூன்றுமுறை ஈளைசுரங்கள், அதிசுரம், இது முதலான சுரங்களெல்லாம் தீரும்.

## எண்ணெய் வகைகள் முற்றிற்று.

# லேகிய வகைகள்

## கரிசாலை லேகியம்

கையாந்தகரையை இடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு படி-1; மேல்தோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, கடுகு, கண்டங்கத்திரிவேர்ப்பட்டை, நெல்லி முள்ளி, கர்க்கட சிங்கி, சடாமாஞ்சில், தேவதாரம், தான் றிக்காய்த் தோல், சிறுதேக்கு, இந்துப்பு, இவை பன்னி ரண்டும் வகை 1-க்கு விராகனிடை-1¼.

இவற்றுள் முன் 11-சரக்குகளையும் இடித்து வடி கட்டின சூரணத்துடன் இந்துப்பைத் தூள் செய்து சேர்த்து, முன் சாற்றிற் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயா யெரித்து, சாறெல்லாம் சுண்டி, லேகிய பதத்திலிறக்கி ஆறின பின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும். அடுப்பிலிருக்கும்போது மர அகப்பையால் கிளறிக் கொண்டிருக்க வேண்டியது.

பிரமாணம்:—தேக பலம், வியாதி பலம் முதலியவை களுக் கேற்றபடி 1½-3-விராகனிடை, காலையில் ஒரு வேளை மாத்திரம் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்:—ஈளை, இருமல், காசரோகம் ஆகியவை தீரும்.

## பூசனிக்காய் லேகியம்

(1) முற்றலானதும் பருமனானதுமான பூசனிக் காயை யுடைத்து, அதற்குள்ளிருக்கிற, குடல், விதை முதலியவைகளை யெல்லாம் நீக்கிச் சுத்தி செய்து, சதை யைச் சன்னமாய்த்திருகி, பிட்டாக அவித்துக் கொஞ்ச மும் ஜலமில்லாமற் பிழிந்து, சட்டியைக் காயவைத்து அதில் பசுவின் நெய்யைவிட்டு, முன் திருகின சதை யைப்போட்டுப் பக்குவமாகச் சிவக்க பொரித்தெடுத்து, உரலிலிட்டு, இடித்துத்தெள்ளி தூளாகச்செய்து கொள்க.

(2) கண்டத்திப்பிலி, ஓமம், சாதிக்காய், ஏலம், செண்பகப்பூ, இலவங்கம், மேல்தோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, கர்க்கடசிங்கி, செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், நிலவேம்பு, வேப்பம்பட்டை, சிறுதேக்கு, கொத்துமல்லிவிதை, சிறுநாகப்பூ, நற்சீரகம், தேவதாரம், கருஞ்சீரகம், இந்துப்பு இந்த 22-சரக்குகளும் வகை 1-க்கு விராகனிடை $3\frac{3}{4}$, இவற்றுள் முன்னுள்ள 21-சரக்குகளையும் இடித்து வஸ்திரகாயம் செய்து இந்துப்பைப் பொடித்துச் சேர்த்து வைத்துக்கொள்க.

(3) பசுவின் நெய் படி $\frac{1}{2}$, தேன் பலம் 5, சீனி சர்க்கரை பலம் 5.

செய்முறை:—நெய்யை யடுப்பேற்றி நெய் காய்ந்தவுடன் (1) லுள்ளதையும் (2) லுள்ளவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து போட்டு, அடிக்கடி கிளறி வெந்த பதத்தில், தேனையும் சீனியையும் சேர்த்து நன்றாய்க் கிளறி லேகிய பதத்தில் இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்துக.

பிரமாணம்:—பலம் 1-2, காலையில் ஒரு வேளை மாத்திரம் சாப்பிடுக.

தீரும் நோய்:—ஈளை, இருமல், குன்மம், க்ஷயம், எரிகுன்மம், இரத்த பித்தம் முதலிய ரோகங்கள் தீரும்.

## பெருமுட்டி லேகியம்

பேராமுட்டி சமூலம் பலம் 24, இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சிதைத்து, ஒரு பாண்டத்திலிட்டு, அதில் நான்குபடி தண்ணீரை விட்டு, ஒரு நாள் ஊற வைத்துக் காய்ச்சி, இரண்டுபடியாகச் சுண்ட வைத்து, இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டி திப்பி நீக்கின கஷாயத்துடன் ஒரு படி பசுவின் பாலைச் சேர்த்து அதில் 20 பலம் சர்க்கரையைக் கரைத்து காய்ச்சி குழம்பான பதத்தில்,

மேல் தோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, செண்பகப்பூ, ஏரிலசி, வெண்சந்தனம், இரேணுகம், பெருஞ் சீரகம், தாளிசப் பத்திரி, சடாமாஞ்சில், இவை பத்தும் வகை 1-க்குப் பலம் $1\frac{1}{2}$, இவற்றை யிடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து, மேற்படி குழம்பில் தூவிக்கிண்டிக் கிளறி, லேகிய பதத்தில்,

காற்படி பசுவின் நெய்யை விட்டு, கால் நாழிகை நேரம் கொதிக்க விட்டுப் பின்பு, பத்து பலம் தேனை விட்டு இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்துக.

பிரமாணம்:—வேளை 1-க்கு விராகனிடை 2-3 ஆகக் காலை மாலை யிரண்டு வேளையும் உட்கொள்க.

தீரும் நோய்:—தொண்டைக் கம்மல், வாந்தி, மயக் கம், இருமல், கை கா லெரிச்சல், அரோசகம், விக்கல் ஆகியவை தீரும்.

## கூழ்ப்பாண்டு லேகியம்

பூசனிக்காய்ச்சாறு படி-5, ஏலம், பச்சிலை, பேரா மல்லி, சிற்றுமல்லி, உலர்த்தின வெண்ணொச்சி இலை, உலர்த்தின, கண்டங்கத்திரி சமூலம், சிறு நாகப்பூ, தேவ தாரம், இலாமிச்சவேர், கொடிவேலி வேர்ப்பட்டை, இல வங்கம், உலர்த்தின சிறு வழுதலை வேர்ப்பட்டை, சிறு தேக்கு, மிளகு, கோஷ்டம், திப்பிலி, மேல் தோல் சீவின சுக்கு, அமுக்கராக் கிழங்கு, தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, மஞ்சட் கடுக்காய்த் தோல், ஓமம், விளாலரிசி, இந்துப்பு, திராக்ஷைப்பழம், இந்த 25-சரக்கும் வகை 1-க் குப் பலம் $\frac{1}{2}$, இவற்றுள் முன் 23 சரக்குகளையும் இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, இந்துப்பையும் பொடித் தும், திராக்ஷைப்பழத்தை யரைத்தும் சேர்த்து, முன் சாற் றில் தூவி, அடுப்பேற்றி யெரித்துக் கிளறி அரை பாகம்

சுண்டினவுடன், 10-பலம் சீனி சர்க்கரையையும், 10-பலம் தேனையும் விட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி யாறினபின் பீங்கானிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—பலம் ¾, 1½, இரண்டு வேளையும் உட்கொள்க.

தீரும் நோய்:—தேக உஷ்ணந் தணிந்து தேகம் பெருக்கும். தாதுவிர்த்தி யுண்டாகும். உஷ்ண சம்பந்தமான இருமல். உஷ்ண காசரோகம் ஆகியவை தீரும்.

## பேட்டா லேகியம்

முற்றினதும் பருமனுனதுமான பூசனிக்காயை யுடைத்து மேற்றோல், உட்புறத்திலுள்ள விதை, குடல் ஆகியவைகளைப் போக்கிச் சுத்திசெய்து இடித்துச் சாற்றைப் பிழிந்து வடிகட்டிக்கொள்க. சுத்திசெய்த மடலரிதாரம், மேல்தோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, லவங்கம் இவை வகை 1-க்கு விராகனிடை 1¼, மஞ்சட் கடுக்காய்த்தோல் விராகனிடை 18¾, சீனி சர்க்கரை பலம் 5, பசும்பால் படி-1.

செய்முறை:—தாளகத்தை வெண்ணெய்போலத் தனியே தூள்செய்து கொள்க. மற்ற சரக்குகளையும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்க. பின்பு இவ்விரண்டு வகைகளையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கொள்க. சாற்றுடன் பாலைச் சேர்த்துக் காய்ச்சி, அரைபாகஞ் சுண்டினவுடன் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில், முன் சூரணத்தைக் கொட்டிக்கிளறி, பதத்திலிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்துக.

பிரமாணம்:—காலையில் ஒருவேளை பலம் 12 சாப்பிடுக.

தீரும் நோய்;—இருமல், ஈளை ஆகியவை தீரும்.

## கண்டங்கத்திரி லேகியம்

கண்டங்கத்திரிவேர் பலம் 100, இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துச் சிதைத்துக்கொள்க. மஞ்சட் கடுக்காய்த்தோல் பலம் 100 இவ்விரண்டையும் ஒரு பாண்டத்திற் போட்டு 8-படி தண்ணீரைவிட்டுக் காய்ச்சி 2 படியாகச் சுண்டினபின் இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின கஷாயத்தில் 100 பலம் பழைய வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் 6 பலம் தேனைவிட்டு மேல் தோல் நீக்கின சுக்கு, மிளகு, திப்பிலி இவை மூன்றும் வகை 1-க்கு பலம் 3. ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கண்டத்திப்பிலி இந்நான்கும் வகை 1-க்குப் பலம் 1. இவற்றைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து முன் பாகிற் கொட்டிக்கிளறி லேகிய பதத்திலிறக்கி ஆறின பின் பீங்கானிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—தேக பலம், வியாதி பலம் முதலியவைகளுக்குத் தகுந்ததுபோல் வேளை 1-க்குப் பலம் ½, 1, ஆக, 40-நாள் காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்க.

தீரும் நோய்:—ஐவகைக் குன்மங்கள், கபரோகங்கள், க்ஷயம், ஈளை, விக்கல், கவுசை, நீராம்பல் முதலியவை தீரும்.

## மகா சண்டமாருத லேகியம்

மலைக்கடுக்காய் என்னும் பெருங் கடுக்காய் 100. இதனை ஒரு மண் பாண்டத்திற் போட்டு, அதில் புளித்த காடியை விட்டுக் காய்களின் மேல் நாலங்குல மிருக்கும் படியாக வார்த்து, மூன்று நாள் ஊற வைத்து, நாலாம் நாளெடுத்து வெயிலிலுலர்த்த வேண்டும். பின்பு முன் போலவே கடுக்காய்களை முன் பாத்திரத்திற் போட்டு முன்போல காடியை விட்டு மூன்றுநாளூறவைத்துலர்த்தி, மூன்றும் தடவையும் இப்படியே செய்துலர்த்தி, கடுக்காய்

களைத் துண்டித்து உள்விதையை நீக்கித் தோல்களை நிறுத்து, கண்ட எடையில் நாலிலோரெடை கல்லுப்பைப் பொடித்துச் சேர்த்து, புளிப்பேறின பசுவின் மோரை முன்போலவே விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து, மோர் சுண்டினபின் எடுத்து வெயிலிலுலர்த்தி யிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயம் செய்து கொள்க.

கறுப்புப்பு, இந்துப்பு இவ்விரண்டும் வகை 1-க்குப் பலம் 1. இவ்விரண்டையும் தூள்செய்து கொள்க. கண்டத் திப்பிலி, அரிசித்திப்பிலி, செவ்வியம், கொடிவேலிவேர்ப் பட்டை, மிளகு, மேல்தோல் சீவின சுக்கு, ஓமம், இவ் வேழும் வகை 1-க்குப் பலம் 5. இவற்றை யிடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்க.

பின்பெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து செல்லத் தக்க அளவு எலுமிச்சம் பழச்சாற்றை விட்டுப் பிசைந்து, தான்றிக் காயளவாக உருண்டைகள் செய்து வைத்துக் கொள்க. இந்த அவுடதத்திற்கு மகா சண்ட மாருத லேகியமெனப் பெயர்.

பிரமாணம்:—இவற்றில் ஒரு உருண்டையைக் காலை யிலும், ஒரு உருண்டையை மாலையிலும் உபயோகிக்க வேண்டும்; இவ்விதம் 40 நாள் செய்க.

தீரும் நோய்:—எல்லாவித கபரோகங்களும் தீரும். இருமல் ரோகம், காசரோகம், குன்மரோகம், அஜீரண ரோகம், மந்தாக்கினி ரோகம் முதலியவைக ளெல்லாந் தீரும்.

பத்தியம்:—வறுத்த உப்பாகும், புளி, புகை இவை யாகா. பசும்பால், பசுவின் நெய், முருங்கைப் பிஞ்சு, வழுதலங்காய், அவரைப் பிஞ்சு, துவரம்பருப்பு, முளைக் கீரை, அறுகீரை, வாழைப் பிஞ்சு ஆகியவை ஆம்.

## சண்டமாருத லேகியம்

கண்டங்கத்திரி, தூது வளை, சங்கங்குப்பி, மணத் தக்காளி, ஆடாதோடை, கையாந்தகரை, மஞ்சணத்தி, இவ்வேழையும் தனித்தனி யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு வகை 1-க்குப் படி ¼, இவற்றை யொன்ருய்ச் சேர்த்துக் காய்ச்சிக் குழம்பான பதத்தில், 5 பலம் பனவெல்லத்தைக் கரைத்து சங்ராஷ்டம், அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், இம்மூன்றும் வகை 1-க்குப் பலம் 1½, இவற்றை யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்தை மேற்படி குழம்பில் தூவி, தேன் பலம் 5, பசுவின் நெய் பலம் 5 ஆகிய இரண்டையும் விட்டுக் காய்ச்சி நன்ருய்க் கிண்டிக் கிளறி பதத்திலிறக்கி ஆறினபின் பத்திரப் படுத்துக.

பிரமாணம்:—தான்றிக்காய்ப் பிரமாணம் காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்க.

பத்தியம்:—உப்பு, புளி, புகை, பெண், வாயுப்பதார்த்தங்கள் ஆகியவை யாகா. நெய், பால், முளைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல், ஆகியவைகளாம்.

தீரும் நோய்:—எல்லாவகைக் கபரோகங்களுந் தீரும்; இருமல், தொண்டைக்கட்டு, தொண்டைக்கம்மல் முதலிய ரோகங்கள் தீரும்.

பனவெல்லத்தி லனுபானித்துண்ண, இரத்தகாசம் முதலியவைகளுந் தீரும்.

இந்த மருந்திற்குச் சண்டைமாருத லேகியமெனப் பெயராம்.

## வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 40, இதன் மேற்புரணியை நீக்கிச் சுத்திசெய்து, சிறு துண்டுகளாகத் துண்டித்து, உரலிற் போட்டிடித்துப் பொடியாக்கி, ஒரு மண்பாண்டத்திலிட்டு

அதில் 16-படி தண்ணீரைவிட்டு, மூன்று நாளூறவைத்து நாலாம்நாள் அடுப்பேற்றிக் காய்ச்சி, 2-படியாகச் சுண்டினவுடனிறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின கஷாயத்தில்,

ஏலரிசி, நெல்லிமுள்ளி, லவங்கம், லவங்கப்பட்டை, நன்னாரிவேர், அரிசித்திப்பிலி, கோரைக்கிழங்கு, கொத்துமல்லிவிதை, லவங்கப்பத்திரி, வெட்டிவேர், அதிமதுரம், சீந்திற் சர்க்கரை, நெல்லிப்பருப்பு, விலாமிச்சம்வேர், பேரிச்சம்பழம் இவை 15-ம் வகை 1-க்கு விராகனிடை $1\frac{1}{4}$, இவற்றுள் முன்னுள்ள 14 சரக்குகளையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்துடன், பேரீச்சம் பழத்தை யரைத்துக் கலந்து, முன் கஷாயத்தில் தூவிக் காய்ச்சும்போது,

அதில் $12\frac{1}{2}$ விராகனிடை சீனி சர்க்கரையைத் தூவி, தேன், பசும்பால் ஆகிய 2-ம் வகைக்கு ஆழாக்கு விட்டு, சிறுதீயாயெரித்து, பதத்திலிறக்கி ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்துக.

பிரமாணம்:—வேளை 1-க்கு விராகனிடை 1-$1\frac{1}{2}$-இதனைப் பசுவின்பாலிற் கரைத்துப் பானஞ் செய்க. 20-நாள் காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும் நோய்:—பித்த சம்பந்தமான எல்லாவகைக் காசரோகங்கள், உளமாந்தை, அக்கினி மந்தம், சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—கைப்புப் பதார்த்தங்கள், புளி ஆகியவைகளாகா. நெய், பால், சர்க்கரை, உப்புக்கண்டம் முதலியவைகளாகும்.

## காசக் கத்திரி லேகியம்

கண்டங்கத்திரி சமூலம், கறிமுள்ளி சமூலம், விஷ்ணுகாந்தி சமூலம், சங்கவேர், இம்புறுவேர், பருத்திவேர், நன்னாரிவேர், நில ஆவாரைவேர், தூதுவளை சமூலம், புன்னைவேர், கருந்துளசி சமூலம், இவை 11-ம் வகைக்குப்

பலம் 50, இவற்றுள் வேர் வகைகளைச் சன்னமாய்த் துண்டித்தும், மற்றவைகளைச் சன்னமாக அரிந்துப் பொடித்தும் ஒரு மண்பாத்திரத்திலிட்டு, அதில் 24-படி தண்ணீரை விட்டு, அடுப்பேற்றிக் காய்ச்சி மூன்றுபடியாகச் சுண்ட வைத்து, இறக்கி யிளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின கஷாயத்துடன், பசுவின்பால் படி 1, சீனி சர்க்கரை சேர் 5, இவ்விரண்டையும் சேர்த்து, அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துத் துழாவி குழம்பாகும் பதத்தில்,

சங்கம்வேர்ப்பட்டை, கோஷ்டம், மிளகு, மேல் தோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, ஓமம், சங்ராஷ்டம், ஏலரிசி, மாசக்காய், வெட்பாலையரிசி, விளலரிசி, கடுகுரோகணி, வாய்விளங்கம், சிறுதேக்கு, கொடிவேலிவேர்ப் பட்டை, கூகைநீறு, பருத்திக்கொட்டைப் பருப்பு, சடாமாஞ்சில், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், வெண்காரம், இந்துப்பு, திராக்ஷைப்பழம் இவை 24-ம் வகை 1-க்குப் பலம் 1. இவற்றுள் முன் 21 சரக்குகளையும் இளவறுப்பாய் வறுத்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்துடன், வெண்காரத்தைப் பொரித்துத் தூள் செய்தும், இந்துப்பைத் தூள்செய்தும், திராக்ஷைப்பழத்தை யரைத்தும் சேர்த்து மிஸ்ரமித்து ஷை குழம்பில் சிறுகத் தூவிக் காய்ச்சி வெந்தபதத்தில், 1 படி பசுவின்நெய், 1 படி தேன் ஆகிய இரண்டையும் விட்டு நன்றாய்க் கிண்டிக் கிளறிக் கொடுத்துப் பதத்திலிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்துக.

பிரமாணம்:—வேளை 1-க்கு விராகனிடை $1\frac{1}{2}$ 2. காலை மாலை இரண்டு வேளையும் வியாதி சாதாரணமானதாயின் 20 நாளும், அது கடினமானதாயினும் நாட்பட்டதாயினும் 40 நாளும் உபயோகிக்கவும்.

பத்தியம்:—புளிப்புப் பதார்த்தங்கள், கைப்புப் பதார்த்தங்கள், புகை ஆகியவை யாகா.

தீரும் நோய்:—எல்லாவிதக் காசரோகங்களும் தீரும். இருமல், தேக இளைப்பு, தேக துர்ப்பலம் முதலியவைகளுந் தீர்ந்து தேக ஆரோக்கிய முண்டாம்.

## அந்தர கங்கை லேகியம்

ஆகாசத் தாமரையின் வேர், காம்பு முதலியவைகளைச் சுத்தமாக நீக்கிவிட்டு இலையை மாத்திரம், 2 பலம் நிறுத்து எடுத்துக்கொள்க. 2 பலம் பழம் புளியைக் குழம்பு பதமாய்க் கரைத்துக் கோது-கொட்டை முதலியவைகளை நீக்கி வடிகட்டி, அதில் முன் சித்தப்படுத்தின இலையைப் போட்டு வேகவைத்து, வெந்த பக்குவத்திலிறக்கி சூடாறினபின் குளிர்ந்த ஜலத்தை விட்டுக் கழுவி விடவும். இப்படிச்செய்வது அந்த இலையிலுள்ள கரகரப்பை நீக்குவதற்கேயாம். இலைகளை மாத்திரம் சாக்கிரதையாயெடுத்து ஒரு மண்பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பனவெல்லம் பலம் 5, பசுவின் நெய் பலம் 5, முன் சித்தப்படுத்தின இலையுடன் வெல்லத்தைத் தூள்செய்து போட்டு நெய்யையும் விட்டு பாத்திரத்தைப் பிரிமணையின் மீது வைத்து மத்தாற் கடையவேண்டும். வெண்ணெய் போலான பதத்தில் வழித்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்துக.

பிரமாணம்:—விராகனிடை 4-5. காலை மாலை இரண்டு வேளையும் 16 நாள் உட்கொள்க.

பத்தியம்:—உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்க. புளி, புகை ஆகியவைகளை நீக்குக.

தீரும் நோய்:—முளை மூலம், இரத்த மூலம், மூல சம்பந்தமான காசரோகம், இருமல், இரைப்பு ஆகியவைகள் தீரும்.

## லேகிய வகைகள் முற்றிற்று.

உ

கடவுள் துணை

அநுபோக

# வைத்திய குணபோதினி

## அட்டவணை

### சுத்தி வகைகள்


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| பவழ சுத்தி | 1 | காரத்துக்கு சுத்தி | 3 |
| லிங்க சுத்தி | 1 | கெந்தி சுத்தி | 3 |
| கெவுரி சுத்தி | 1 | ரசம் சுத்தி | 3 |
| வீர சுத்தி | 1 | முடிதார சுத்தி | 3 |
| பூர சுத்தி | 2 | தாரசிங்கி சுத்தி | 3 |
| வெள்ளை சுத்தி | 2 | தொட்டிப்பாஷாணம் சுத்தி | 4 |
| குதிரைபல்லி சுத்தி | 2 | மயில்துத்தம் சுத்தி | 4 |
| சிலை சுத்தி | 2 | துருசு சுத்தி | 4 |
| அரிதார சுத்தி | 2 | சகஸ்திரபேதி சுத்தி | 4 |
| சிலாசத்து சுத்தி | 2 | அஞ்சனக்கல் சுத்தி | 4 |
| கல்நாரி சுத்தி | 2 | நாக சுத்தி | 4 |
| கெருடபச்சை சுத்தி | 2 | தாம்பர சுத்தி | 4 |
| சினக்கார சுத்தி | 3 | நாக சுத்தி | 5 |
| பொரிகார சுத்தி | 3 | காந்த சுத்தி | 5 |
| குக்கில சுத்தி | 3 | காரீய சுத்தி | 5 |
| குந்திரிக்கஞ் சுத்தி | 3 | பொன்னிமிலை சுத்தி | 5 |

| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| அபிரேக்கு சுத்தி | 5 | மனோசிலை சுத்தி | 7 |
| கல்மதச் சுத்தி | 5 | துத்தம் துருசு சுத்தி | 7 |
| நேர்வாளச் சுத்தி | 5 | வெங்காரம் சுத்தி | 7 |
| சேங்கொட்டைச் சுத்தி | 5 | கமரி சுத்தி | 7 |
| சிவதை சுத்தி | 6 | எலிபாஷாணஞ் சுத்தி | 7 |
| அமுக்குரூவேர் சுத்தி | 6 | குங்கிலிய சுத்தி | 7 |
| அறுபத்துநாலு சரக்குகளின் சுத்தி | 6 | சிவதை சுத்தி | 7 |
| | | எண்ணெய் சுத்தி | 7 |
| ரசம் சுத்தி | 6 | ஊமத்தன்விரை சுத்தி | 8 |
| கெந்தக சுத்தி | 6 | சுக்கு சுத்தி | 8 |
| தாளகம் சுத்தி | 6 | எட்டிகொட்டை சுத்தி | 8 |
| வெள்ளை பாஷாணம் சுத்தி | 6 | சீரகச் சுத்தி | 8 |
| சாதிலிங்கம் சுத்தி | 6 | மாசிக்காய் சுத்தி | 8 |


## சூரண வகைகள்


| | | | |
|---|---|---|---|
| சுரப் பிரமாணம் | 9 | காமாலை வீக்கம்கரைய சூரணம் | 15 |
| சுரத்திற்கு சூரணம் | 9 | தாவாக்கினிச் சூரணம் | 16 |
| அசுவகெந்தி சூரணம் | 10 | விளங்காதிச் சூரணம் | 16 |
| அறுவகைச் சூரணம் | 10 | வேறு இஞ்சிச் சூரணம் | 17 |
| ஈளை இருமலுக்குச் சூரணம் | 11 | கட்டுசூலைக்கு கூக்குடாதிச் சூரணம் | 17 |
| தாளிசபத்திரி சூரணம் | 11 | பூபதிச் சூரணம் | 18 |
| நிலாவிரைச் சூரணம் | 11 | இருமல்தீர இண்டாதிச் சூரணம் | 19 |
| திராட்சாதி சூரணம் | 12 | அதிசாரக்கிராணிகள்தீர தாடினச் சூரணம் | 19 |
| ஏலாதிச் சூரணம் | 12 | சந்தனாதிச் சூரணம் | 20 |
| மகா ஏலாதிச் சூரணம் | 13 | ஏலனாதிச் சூரணம் | 20 |
| கர்ப்பூராதிச் சூரணம் | 14 | | |
| மகா அசுவகெந்திச் சூரணம் | 15 | | |

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| காய்ச்சல் கிராணிக்கு மாதளச் சூரணம் | 21 |
| மூலத்துக்குச் சூரணம் | 21 |
| இஞ்சிச் சூரணம் | 22 |
| பரங்கிப்பட்டைச் சூரணம் | 22 |
| புடம்போடும் வகைகள் | 23 |


## செந்தூர வகைகள்


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| அயக்காந்தச் செந்தூரம் | 24 |
| அயச் செந்தூரம் | 24 |
| அரிதாரச் செந்தூரம் | 25 |
| காடிகாரச் செந்தூரம் | 25 |
| லோகச் செந்தூரம் | 26 |
| தாளகச் செந்தூரம் | 26 |
| ரசச் செந்தூரம் | 26 |
| சண்டமாருதச் செந்தூரம் | 27 |
| அயக்காந்தச் செந்தூரம் | 27 |
| கல்லுப்பு செந்தூரம் | 28 |
| உப்பு செந்தூரம் | 28 |
| காந்தச் செந்தூரம் | 29 |


## பற்ப வகைகள்


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இரச பற்பம் | 30 |
| அண்ட பற்பம் | 30 |
| அரிதார பற்பம் | 30 |
| தாளக பற்பம் | 31 |
| தாளக பற்பம் | 31 |
| கெந்தக பற்பம் | 31 |
| தாம்பர பற்பம் | 32 |
| வங்க பற்பம் | 32 |
| துருசு பற்பம் | 32 |
| தங்க பற்பம் | 32 |
| நில ஆவாரை பற்பம் | 32 |
| காரீய பற்பம் | 33 |
| பவழ பற்பம் | 33 |
| கலன்கொம்பு பற்பம் | 33 |
| குமறி பற்பம் | 33 |
| சீமை கல்நார் பற்பம் | 34 |
| நாட்டுக் கல்நார் பற்பம் | 34 |
| அரிதார பற்பம் | 34 |
| பொட்டிலுப்பு பற்பம் | 35 |
| கல்லுப்பு பற்பம் | 35 |
| வெள்ளை பாஷாண பற்பம் | 35 |
| பூர பற்பம் | 35 |

## மாத்திரை வகைகள்

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பேதிக்கு பூபதி மாத்திரை | 36 |
| வயிற்றுவலிக்கு மாத்திரை | 36 |
| இரவு அயராது மாத்திரை | 36 |
| வெட்டிவேர் மாத்திரை | 37 |
| நாலாமுறை காய்ச்சலுக்கு மாத்திரை | 37 |
| குளிர் காய்ச்சலுக்கு சீதா ராமபாணம் | 38 |
| கிருணிவச்சிர கபாட மாத்திரை | 38 |
| ஜன்னி சுரத்திற்கு மகா வயிரவ ரசம் | 39 |
| குளிர்காய்ச்சலுக்கு ப்ரதாப ருத்திர ரசம் | 40 |
| சகல சுரங்களுக்கு அழகிய சொக்கன் குளிகைகள் | 40 |
| குழந்தைகள் சுரத்திற்கு சாத்திர பேதி | 41 |
| குழந்தைகளுக்கு பேதிக்கு | 41 |
| விஷ சுரத்திற்கு குளிகை | 42 |
| சுரத்திற்கு ஆனந்த பைரவன் | 42 |
| சன்னிக்கு ரத்தினகிரிக் குளிகை | 42 |
| சுரத்திற்கு ஏலாதி குளிகை | 43 |
| சீத சுரத்திற்கு குளிகை | 43 |
| சுரத்திற்கு மாத்திரை | 43 |
| வாலசஞ்சீவி மாத்திரை | 44 |
| வேறு விதம் | 44 |
| பிள்ளைகளுக்கு சுரத்திற்கு மாத்திரை | 44 |
| பெருவாரி காய்ச்சலுக்கு மாத்திரை | 44 |
| விஷபேதிக்கு மாத்திரை | 45 |
| கோரோசனை மாத்திரை | 45 |
| சின்னயேலாதி மாத்திரை | 46 |
| சுரத்திற்கு மாத்திரை | 46 |
| பாலபூபதி மாத்திரை | 46 |
| வாலசஞ்சீவி குளிகை | 47 |
| பஞ்சரத்தின குளிகை | 47 |

---

## குழந்தைகள் ஔஷதம்

| | |
|---|---|
| மார்தரோகம் வருகிற விதம் | 48 |
| இருபத்தொன்று மார்த ரோகம் வகை | 48 |
| மார்தரோகங்களின் குணம் | 48 |
| மார்தத்துக்கு குழம்பு | 49 |
| மார்தத்துக்குப் பச்சிலைச் சாறு | 49 |
| மார்தத்துக்கு குடிநீர் | 49 |
| மார்தத்துக்கு கியாழம் | 50 |
| மார்தத்துக்கு குளிகை | 50 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| அநுபானம் | 50 |
| உளைமாந்தம், உட்சுரம், எலும்புரிக்கிக்கு மருந்து | 51 |
| சுழிகணம், உப்பிசம், கோழைகட்டு, இளைப்புக்கு மருந்து | 51 |
| மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு மருந்து | 51 |
| மாந்தம் வயிற்றுவலி செறியா மாந்தத்துக்கு மருந்து | 51 |
| மாந்தவலிப்பு-காக்கை வலிப்புக்கு மருந்து | 51 |
| மாந்தவீக்கம், விஷவீக்கம், சுரம், நீர்க்கட்டுக்கு கியாழம் | 52 |
| உப்பல் மாந்தத்துக்கு மருந்து | 52 |
| அமுர்தாதிக் குளிகை | 52 |
| முக்கல் வயிற்றுக் கடுப்புக்கு | 53 |
| சீதக்கடுப்புக்கு மருந்து | 53 |
| அதிமதுர மாத்திரை | 53 |
| அமிர்த சஞ்சீவி குளிகை | 53 |
| பேதிக்கு அமிர்த சஞ்சீவி லிங்கக் குழம்பு | 54 |
| பூபதி மாத்திரை | 54 |
| பேதிபூபதி மாத்திரை | 55 |
| ஏலாதி மாத்திரை | 55 |
| கட்டுவாதி மாத்திரை | 55 |
| கற்பூராதி மாத்திரை | 56 |
| கோடாசுழி மாத்திரை | 56 |
| கோரோசனை மாத்திரை | 56 |
| சஞ்சீவி குளிகை | 57 |
| விரோசன சண்பகப்பூ மாத்திரை | 57 |
| கஸ்தூரி மாத்திரை | 58 |
| குரு மாத்திரை | 58 |
| பூர மாத்திரை | 58 |
| வில்வாதி மாத்திரை | 58 |
| இரசச் செந்தூர மாத்திரை | 59 |
| பாலசஞ்சீவி மாத்திரை | 59 |
| இராமபாணக் குளிகை | 59 |
| ஏலாதி மாத்திரை | 60 |
| இருமலுக்குச் சூரணம் | 60 |
| பேதி மாத்திரைகள் | 60 |


## எண்ணெய் வகைகள்


| | |
|---|---|
| ஜாதிக்காய் எண்ணெய் | 62 |
| கொதிப்புகணத்திற்கு எண்ணெய் | 63 |
| மாந்தப்பொருமலுக்கு எண்ணெய் | 63 |
| எரிகணத்திற்கு எண்ணெய் | 64 |

| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| மூக்குக்கணத்திற்கு எண்ணெய் | 64 | சூரியபுட நல்லெண்ணெய் | 67 |
| உலர்ந்த தேகத்திற்கும் பதினெட்டு கணம் வெட்டை சுரத்திற்கும் எண்ணெய் | 65 | 18-கரப்பானுக்கு எண்ணெய் | 67 |
| தோஷம் ஒன்பது, மாந்தம் ஒன்பது, பதினெட்டு கணத்திற்கும் எண்ணெய் | 65 | மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பை எண்ணெய் | 68 |
| மாந்தகோடரி எண்ணெய் | 66 | மேகத்தினை லிளைத்தவர்களுக்கு நல்லெண்ணெய் | 69 |
| தேங்காய் எண்ணெய் | 66 | குளிர்ச்சிக்கு எண்ணெய் | 69 |
| மாந்தத்திற்கு நல்லெண்ணெய் | 66 | மண்டைக் குடைச்சலுக்கு எண்ணெய் | 70 |
| சன்னிசுரத்திற்கு வேப்பெண்ணெய் | 67 | காதில் சீழ்வடிதலுக்கு எண்ணெய் | 70 |
| | | சித்தாதி எண்ணெய் | 70 |
| | | தினவுக்குப்பூச எண்ணெய் | 71 |
| | | கண்டமாலைக்கு எண்ணெய் | 71 |
| | | அரக்கெண்ணெய் | 71 |


## லேகிய வகைகள்


| | | | |
|---|---|---|---|
| கரிசாலை லேகியம் | 73 | மகா சண்டமாருத லேகியம் | 77 |
| பூசனிக்காய் லேகியம் | 73 | சண்டமாருத லேகியம் | 79 |
| பெருமுட்டி லேகியம் | 74 | வில்வாதி லேகியம் | 79 |
| கூழ்ப்பாண்டு லேகியம் | 75 | காசக் கத்திரி லேகியம் | 80 |
| பேட்டா லேகியம் | 76 | அந்தா கங்கை லேகியம் | 82 |
| கண்டங்கத்திரி லேகியம் | 77 | | |


அட்டவணை முற்றிற்று.

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

# கைத்தொழில் முறைகள்

**விலை ரூபாய் 2.**

1000-இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகு வர்த்திகள், தீக்குச்சிகள், வார்னீஸ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 - எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில்
இந்நூல் இருக்க வே
ஏரோப்ளேன் மரேப

தமிழ் புத்தகங்க
விலை விபர ஜாபித
தங்கள் விலாசத்தை
வசமாக அனுப்பப்ப

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. ப
4, வெங்
சென்னை-1.